பக்கங்கள் எட்டு
விலை ரூபா 5-00

Registered as a News Paper in Sri Lanka

# வலம்புரி
VALAMPURI

சங்கு 02 வள்ளுவர் ஆண்டு 2032 ஆவணி 29 வெள்ளிக்கிழமை (14-09-2001) தொலைபேசி: 3378 ஒலி: 277

அசல் 22 கரட் தங்க நகைகளுக்கு யாழ் நகரில் சிறந்த ஸ்தாபனம்
**அர்ச்சனா ஜுவலர்ஸ்**
118, கஸ்தூரியார் வீதி,
176/1, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.
[கி-2127]

### அரசு- ஜே. வி. பி கூட்டுக்குளதிர்ப்பு

# நேற்று நான்கு முக்கிய அமைச்சர்கள் பதவியை இராஜினாமா செய்தனர்!

### புதிய அமைச்சரவையில் இடம்பெறவும் மறுப்பு

(நமது நிருபர்)

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா தலைமையிலான பொது ஜன ஐக்கிய முன்னணி அரசு மக்கள் விடுதலை முன்னணி (ஜே வி பி, யுடன் செய்து கொண்ட புரிந்துணர்வு உடன்படிக்கையை அடுத்து புதிய அமைச்சரவையில் பதவிவகிக்கப்போவதில்லை என அறிவித்துள்ள முக்கிய அமைச்சர்களான பேராசிரியர் ஜி.எல். பீரிஸ எஸ்.பி- திஸநாயக்கா, ஜெயராஜ் பெர்னாண்டோபுள்ளே, மகிந்த விஜயசேகரா ஆகியோர் தமது அமைச்சர் பதவிகளை நேற்று இராஜினாமாச் செய்துள்ளனர்

இதுதொடர்பான இராஜினாமாக்கடிதங்களை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவிற்கு அனுப்பி வைத்துள்ளனர்.

பொதுஜன ஐக்கிய முன்னணி அரசு மீது ஐக்கிய தேசியக் கட்சி உட்பட மற்றும் எதிரணிக் கட்சிகள் கூட்டாகக் கொண்டு வந்த நம்பிக்கையில்லாப் பிரேரணையை அடுத்து கடந்த இரண்டு மாதங்களாக நாட்டில் நிலவிய அரசியல் ஸ்திரமற்ற நிலைமைக்கு முற்றுப்புள்ளி வைக்கும் வகையில் அரசாங்கம் மக்கள் விடுதலை முன்னணி (ஜே. வி.பி) யின் புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்றைச் செய்து ஆட்சியைத் தக்கவைத்துக் கொண்டது.

இந்த உடன்படிக்கையையும், ஜே வி. பியின் ஆதரவுடன் புதிய அமைச்சரவை அமைப்பதையும் விரும்பாத அரசின் முக்கிய அமைச்சர்கள் தத்தம் அமைச்சுப் பதவியில் இருந்து இராஜினாமாச் செய்து கொண்டதுடன் புதிய அமைச்சரவையில் பதவி வகிக்க மாட்டோம் என்றும் தெரிவித்துக் கூட்டாகக் கடிதமொன்றை ஜனாதிபதி சந்திரிகாவிற்கு அனுப்பிவைத்துள்ளனர்.

அக்கடிதத்தில் அவர்கள் தெரிவித்திருப்பதாவது,

பொதுஜன ஐக்கிய முன்னணி அரசு, ஜே. வி. பியுடன் கூட்டுச் சேர்ந்திருப்பதன் மூலம் யுத்தத்திற்கு முடிவு கட்டவோ, இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாணவோ முடியாது.

பொதுஜன ஐக்கிய முன்னணி - ஜே. வி. பி கூட்டு மூலம் நாட்டின் முதலீட்டா

[2 ஆம் பக்கம் பார்க்க]

### அமெ. விமானத்தில் சென்ற இலங்கை நாட்டு கர்பிணிப் பெண்ணும் மரணம்

[கொழும்பு]

அமெரிக்காவில் தாக்குதல் நடத்திய பயணிகள் விமானத்தில் பிரயாணம் செய்த இலங்கையைச் சேர்ந்த கர்ப்பிணிப் பெண்ணொருவரும் விமானம் வெடித்துச்சிதறியதில் பரிதாபகரமாக உயிரிழந்துள்ளார்,

பெஸ்ரனில் இருந்து லொஸ்ஏஞ்சல்ஸ் நோக்கிபறந்துகொண்டிருந்த விமானத்தில் பயணம்செய்த காலி மாவட்டத்தைச்சேர்ந்த ரம்பாசாலி [வயது-28] என்ற கர்ப்பிணிப்பெண்ணே பலியானவராவர்.

இலங்கையைச் சேர்ந்த பிரஸ்தாப பெண்மணி இரத்தினக்கல் வியாபாரி யொருவரின் மகள் எனவும் இவர் அமெரிக்கர் ஒருவரைத் திருமணம் செய்து அங்கேயே வசித்து வந்தவரெனவும், தெரிய வருகிறது.

வெடித்துச் சிதறிய மேற்படி விமானத்தில் இப் பெண்மணியுடன் அவரது அமெரிக்க

[2ஆம் பக்கம் பார்க்க]

### எழுச்சி தினம் நாளை ஆரம்பம

[வவுனியா]

தியாகி லெப்டினன்ட் கேணல் திலீபனின் பதினான்காம் ஆண்டுநிறைவு நாள் எழுச்சி நிகழ்வுகள நாளை சனிக் கிழமை ஆரம்பமாகவுள்ளன [ந. 5]

## கட்சிக்குள் இருந்துகொண்டு போராடுவேன்!

## ஜே.வி.பி. விதித்த நிபந்தனைக்கமைய 20 அமைச்சர்கள் இன்று பதவியேற்பு

(கொழும்பு)

ஜே வி. பி. பொதுஜனஐக் ...

20பேர்கொண்ட புதிய அமைச்சரவை பதவி ஏற்றிருக்க வேண்டும்.

இச்சிரமங்களை எல்லாம் தாண்டி இன்று 20பேர் கொண்ட மந்திரி சபை சத்தியப்

## போராடுவேன்!

## மகிந்த ஜனாதிபதிக்கு கடிதம்

(கொழும்பு)

பொதுஜனஐக்கிய முன்னணி அரசாங்கத்தினால் புதிதாக அமைக்கப்படவுள்ள அமைச்சரவையில் எக்காரணம் கொண்டும் நான்இடம் பெறமாட்டேன் என்று அமைச்சர் மகிந்தவிஜயசேகரா ஜனாதிபதிக்கு அனுப்பி வைத்துள்ள கடிதம்ஒன்றில் தெரிவித்துள்ளார்:

மகிந்தவிஜயசேகரா அமைச்சர் பதவியை இராஜினாமாச் செய்தபின் ஜனாதிபதிசந்திரிகா குமாரதுங்காவிற்கு கடிதமொன்றை அனுப்பிவைத்துள்ளார்

அக்கடிதத்தில் தன்மானமுள்ள நான் இந்த புதிய

(2ஆம் பக்கம் பார்க்க)

(கொழும்பு)

ஜே. வி. பி. பொதுஜனஐக்கியமுன்னணி அரசுக்கிடையே ஏற்பட்ட புரிந்துணர்வு உடன்படிக்கையின் பிரகாரம்இன்று சுப வேளையில் இருபது பேர் கொண்ட புதிய அமைச்சரவை ஜனாதிபதி சந்திரிகா குமார துங்கா தலைமையில் பதவி ஏற்கவுள்ளது.

பொதுஜன ஐக்கிய முன்னணி அரசிற்கு ஜே. வி. பி விதித்த காலக் கெடுவான கடந்த12ம்திகதி புதன்கிழமை 20பேர்கொண்ட புதிய அமைச்சரவை பதவி ஏற்றிருக்க வேண்டும்.

ஆனால் 45 அமைச்சர்களை 20அமைச்சர்களாகக் குறைப்பதில் ஜனாதிபதி சந்திரிகா பல முட்டுக்கட்டைகளையும் கருத்து முரண்பாடுகளையும் சில சிரமங்களையும் அனுபவிக்க வேண்டியிருந்தது.

இச்சிரமங்களை எல்லாம் தாண்டி இன்று20பேர் கொண்ட மந்திரி சபை சத்தியப் பிரமாணம் செய்து பதவி ஏற்கவுள்ளது.

இன்று பதவி ஏற்கவுள்ள ஜனாதிபதி சந்திரிகா தலைமையிலான அமைச்சரவையில் பிரதமர் ரட்ணசிறி விக்கிரம

(2ம் பக்கம் பார்க்க)

## அமெரிக்க நகரங்கள் மீது தாக்குதல்

# பின்லேடனின் சகாககள்பன்னிருவர்

# புலனாய்வில் இனம்காணப்பட்டனர்

(வாஷிங்டன்)

வாஷிங்டன் மற்றும் நியூயோர்க் நகரங்கள்மீதுகடந்த செவ்வாய்க் கிழமை இடம் பெற்ற விமானத் தற்கொலைத் தாக்குதல்களுடன் தொடர்புபட்ட 12 பேரை இனங்கண்டுள்ளதாக அமெரிக்கப் புலனாய்வுப் பொலிசார் அறிவித்துள்ளனர்

சர்வதேச பயங்கரவாதியான ஒஸாமாபின்லேடனின் சகாக்களான மேற்படி 12 பேரும் தாம் திட்டமிட்ட காரியத்தைக் கனகச்சிதமாக முடித்துக்கொண்டு கனடா வழியாக வெளியேறியிருக்கலாமெனவும்,

இவர்களில் இருவர் புளோரிடா மாநிலத்தில் உள்ள வீடொன்றில் தங்கிச்சென்றிருப்பதாகக் கிடைத்ததகவலையடுத்து வீட்டு உரிமையாளரை விசாரித்ததன் பேரில் அவர்கள் தொடர்பான விபரங்கள் அறியப்பட்டிருப்பதாகவும் அமெரிக்கப் புலனாய்வுத் தகவல்கள் தெரிவித்துள்ளன.

[2ஆம் பக்கம் பார்க்க]

# 5000 தே. அ. அட்டைகள் யாழ் வந்து சேர்ந்தன

(யாழ்ப்பாணம்)

புனர்வாழ்வு அமைச்சின் ஏற்பாட்டில் இடம்பெற்ற நடமாடும் சேவையின் போது தேசியஅடையாளஅட்டைக்கு விண்ணப்பித்த 5000 பேரின் அடையாள அட்டைகள் யாழ் செயலக ஆட்பதிவுத் திணைக்களத்திற்குக் கிடைத்துள்ளது.

இவ் அடையாள அட்டைகள் உரியவர்களுக்கு வழங்கநடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளதாக திணைக்கள வட்டாரங் தெரிவித்துள்ளன. (ந)

# ஸ்ரீலங்கன்எயர்லைன்ஸுக்கு 675மி.அ.டொலர் காப்புறுதி

(கொழும்பு)

கட்டுநாயக்கா விமான நிலைய தாக்குதலின் போது சேதமடைந்த நான்கு விமானங்களுக்கும் 675 மில்லியன் அமெரிக்கடொலர் காப்புறுதியாக வழங்கப்பட்டுள்ளது.

ஸ்ரீலங்கா எயர்லைன்ஸ் நிறுவனமேலண்டன்லோயிட் காப்புறுதி நிறுவனத்திடம் மேற்படி காப்புறுதித் தொகையைப் பெற்றுள்ளதாக துறைமுக அபிவிருத்தி அமைச்சர் ரொனி டிமெல் தெரிவித்துள்ளார். இதே வேளை கொழும்புத் துறைமுகத்தின் பாதுகாப்பு பலப்படுத்தகடற்படையின் வைஸ் அட்மிரல் நந்தனதுகுவத்தவின் தலைமையில் பலப்படுத்தப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. [வ]

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# நிவாரண விநியோகம் தாமதம்
# ஏழைப் பொதுமக்கள் ஏமாற்றம்

[யாழ்ப்பாணம்]

இம் மாத உலர் உணவு நிவாரணம் 5 ஆம் திகதிக்கு முன்னதாக கொடுத்து முடிக்கப்பட வேண்டும்என வடக்கு புனர்வாழ்வு அமைச்சு பணிப்புரை விடுத்த போதிலும், நிவாரணக் கொடுப்பனவு இன்னமும் ஆரம்பிக்கப்படவில்லை.

இத் தாமதப் போக்கினால் நிவாரணத்தை நம்பி வாழும் ஏழைப் பொதுமக்கள் மிகுந்த ஏமாற்றத்தையும், பட்டினி நிலையையும் எதிர்நோக்கியுள்ளதாக கூறப்படுகிறது.

இருப்பினும் நிவாரணக் கொடுப்பனவில் இது வரை இருந்த பட்டியல் நடைமுறை மாற்றப்பட்டு உணவு முத்திரை நடைமுறை கொண்டுவரப்படுவதனால் முத்திரை எழுதுவது மற்றும் அவற்றை பொது மக்கள் மத்தியில் விநியோகிப்பதில் ஏற்பட்ட கால தாமதத்தினாலேயே இந்நிலை ஏற்பட்டதாக சம்பந்தப்பட்ட தரப்பில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இது இவ்வாறிருக்க, நிவாரணத்திற்கான உணவு முத்திரை விநியோகத்தை பிரதேச செயலகங்கள் துரிதப்படுத்தியிருப்பதும் குறிப்பிடத்தக்கது.

இ த வேளை கடந்த நிவாரண விநியோகத்தில் பல்வேறு இடங்களிலும் விநியோகிக்கப்பட்ட பருப்பு பாவனைக்கு உகந்ததாக இல்லாதிருந்தமை குறித்து அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிடம் பாதிக்கப்பட்ட பொது மக்கள் நேரடியாகச் சென்று எடுத்துரைத்ததன் பேரில் இம்முறை தரமான உணவுப் பொருட்கள் விநியோகிக்க நடவடிக்கை எடுப்பதெனஉறுதியளித்துள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது.

(உ-10)

## ஆங்கில தினப்போட்டிகள் இன்று முதல் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

2001 ஆம் ஆண்டுக்கான மாவட்டமட்ட, உப மாகாண மட்ட ஆங்கில தினப் போட்டிகள் இன்று முதல் ஆரம்பமாகி எதிர்வரும் 19 ஆம் திகதிவரைதொடர்ந்து யாழ். இந்துமகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இதேவேளை, 16 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமையானபடியால் போட்டிகள் இடம் பெறாது எனவும்,

19 ஆம் திகதி நடைபெறவிருந்த சிரேஷ்ட பிரிவுகவிதை, நாடகப் போட்டிகள் மறுஅறிவித்தல்வரைஒ த்திவைக்கப்பட்டுள்ளதாகவும்,

மாவட்ட மட்ட ஆங்கில தினப் போட்டிகளின் ஒருங்கிணைப்புக்குழுத்தலைவரும் வடமராட்சி பணிப்பாளருமான சி. சிவராஜா தெரிவித்துள்ளார்.

(உ)

## திருகோணமலையில் பயிற்சிக் கருத்தரங்கு 20பேர்இங்கிருந்து பயணம்

(யாழ்ப்பாணம்)

எதிர்வரும் 24ஆம்திகதிதிங்கட்கிழமை திருகோணமலையில் ஆரம்பமாகவுள்ள பயிற்சிக்கருத்தரங்கொன்றில் கலந்து கொள்வதற்காக யாழ். மாவட்டத்தில் கடமையாற்றும் கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் 20 பேர் அங்கு செல்லவுள்ளனர்.

இவர்கள் 20 ஆம் திகதி வியாழக்கிழமை இங்கிருந்து புறப்பட்டு தொடர்ந்து 4 தினங்கள் இடம்பெறவுள்ள மேற்படி கருத்தரங்கில் பங்கு கொள்வர்.

(உ-10)

## சமுர்த்திஉத்தியோகத்தருக்கு வினைத்திறன் தடைகாண் பரீட்சைஇம்மாதஇறுதியில்

(யாழ்ப்பாணம்)

சமுர்த்தி உத்தியோகத்தர்களுக்கான வினைத்திறன் தடைகாண் பரீட்சை இம் மாதம் 29 ஆம் திகதி நடைபெறவுள்ளதாக சகல பிரதேச செயலகங்களுக்கும் சமுர்த்தி அதிகார சபையால் அறிவிக்கப்பட்டுள்ளது.

இப்பரீட்சைக்கு யாழ். மாவட்ட பிரதேச செயலகங்களிலிருந்து தரம் 1, தரம் 2 ஐச் சேர்ந்த உத்தியோகத்தர்கள் தோற்றவுள்ளனர்.

மேற்படி பரீட்சையில் பரீட்சார்த்தி ஒருவர் குறைந்த பட்சம் 40 வீத புள்ளிகளைப் பெற்றிருக்க வேண்டும் எனவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

(உ-15)

## மின்சாரசபை அலுவலகத்தில் தீ விபத்து தடுக்கப்பட்டது

(யாழ்ப்பாணம்)

யாழ். ஆஸ்பத்திரி வீதியில் அமைந்துள்ள இலங்கை மின்சாரசபை அலுவலக கட்டடத் தொகுதி நேற்று பி.ப 1 30 மணியளவில் ஏற்படவிருந்த தீவிபத்து தீயணைப்புப் பிரிவினால் தடுக்கப்பட்டது.

மின்சாரசபைக்கு அருகில் உள்ள பகுதியில் இருந்து பரவிய தீ, கட்டடத்தை அண்மிக்கும் நிலையில் யாழ். மாநகர சபையின் தீ அணைப்பு பிரிவு உடன் அழைக்கப்பட்டு தொடர்ந்து ஏனைய இடங்களுக்கு தீபரவாமல் தடுக்கப்பட்டது.

இச் சம்பவத்தின் போது மின் உபகரணங்களுக்கோ அல்லது மின்சார சபைக்கோ எதுவித சேதமும் ஏற்படவில்லை என்று மின்சாரசபை உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

(உ-15)

## தரம் உயர்வு

(கோப்பாய்)

கோப்பாய் நாவலர் வித்தியாலய அதிபர் கே.வி. குணசேகரம் இலங்கை அதிபர் சேவை தரம் ஒன்றுக்கு கல்விச் சேவை ஆணைக்குழுவினால் தரமுயர்த்தப் பட்டுள்ளார்.

(உ-79)

## கூ. சங்கத்திற்கு நவீன மாடி நிர்மாணிப்பு

(புலோலி)

பருத்தித்துறை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்திற்கு நவீன மாடிக் கட்டடமொன்று 40 இலட்சம் ரூபா செலவில் நிர்மாணிக்கப்படவுள்ளது.

இதற்கான அடிக்கல் நாட்டும் விழா சங்க இயக்குநர் சபைத்தலைவர் எஸ். சிவஞானசுந்தரம் தலைமையில் நடைபெற்றது. பருத்தித்துறை பிரதேச சபைத் தலைவர் ஐ. ஸ்ரீரங்கேஸ்வரன் சம்பிரதாய பூர்வமாக அடிக்கல்லை நாட்டி வைத்தார்.

பருத்தித்துறை மீன் சந்தைக்கு அருகாமையில்உள்ள ப.நோ.கூ. சங்கத்திற்குச் சொந்தமான காணியிலேயே இப்புதிய கட்டத்திற்கான அடிக்கல் நாட்டப்பட்டது.

(செ-52)

## பின்லேடனின்...

இதனையடுத்து கனடா அமெரிக்காஎல்லைப்பகுதியில் இருநாட்டுபுலனாய்வுப் பிரிவினரும் பெருமளவு அதிரடிப்படையினர் மற்றும் பொலிசாரும் தமது நடவடிக்கைகளைத் தீவிரப்படுத்தி யுள்ளனர்.

[உ-7]

## இலங்கை...

நாட்டவரான கணவரும் கூடவேசென்றிருந்தார், சம்பவத்தில்இருவரும் மரணமாகி அவர்களது வாரிசும் மண்ணுக்கு வராமலே விண்ணுக்குச் சென்றது பெரும் வேதனையளிப்பதாக உள்ளது [இ]

## சிறுவிளம்பரம்

### திருத்துதல்

மூக்குக் கண்ணாடி ஒட்டுதல், சகல கமரா வகைகளும் எலக்ரோனிக் பிளாஸ்கன், இதர பிளாஸ்டிக்காலான கை அடக்க அளவு கொண்ட வாட்டர்பம், ஜெனரேற்றர் போன்றவைக் குரியன ஒட்டியும் திருத்தியும் கொடுக்கப்படும். தொடர்பு; சு. நாராயணசாமி 301, கஸ்தூரியார் வீதி (மேல்மாடி கன்னாதிட்டிச் சந்திக் கருகில்) யாழ்ப்பாணம்.

(3545)

## கசிப்பு உற்பத்தி அதிகரிப்பு

(யாழ்ப்பாணம்)

சில்லாலை அம்மன் வீதிப் பகுதியில் வேளாங் கன்னி ஆலயச் சுற்றாடலில் கசிப்பு உற்பத்தி கடந்த சில மாதங்களாக அதிகரித்துள்ளது.

இப்பகுதியில் சனசமூக நிலையங்கள் மற்றும் பல பொது அமைப்புகள்இருந்தும் இது குறித்து எவரும் நடவடிக்கை எடுக்காதமைகுறித்து அப்பகுதி பொது மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

(செ-104)

## இராசி பலன்

14-09-2001
[ஆவணி, 29 வெள்ளி]
துவாதசி ந.இ. 12 03
பூசம் பி.ப 3;34
இராகுகாலம் 10:23- 12 03
சுபநேரம் 6 03- 7.33
மரணயோகம்;

**மேடம்**
கல்வி மேன்மை, பயந்த சுபாவம், ரோகபயம், பகைவர் உறவு.

**இடபம்**
தனவரவு. வாக்குமேன்மை, கூட்டுமுயற்சி, காரியநன்மை.

**மிதுனம்**
கௌரவக் குறைவு, காரிய தாமதம், வீண் விவாதம், அரச நன்மை.

**கடகம்**
உடல் நலம், சயன சுகம், தனவரவு, ஜனவசியம்.

**சிங்கம்**
காரியஅலைச்சல், உணர்ச்சிவசப்படல், தந்தைவழிஉறவு, திடீர் பயணம்.

**கன்னி**
காரிய நன்மை, தெய்வ தரிசனம், பொருள் சேர்க்கை, தொழில் சிந்தை;

**துலாம்**
கடின உழைப்பு, நல்ல தகவல், மேன்மை, தொழில் சிறப்பு;

**விருச்சிகம்**
உடல் உழைப்பு, வீண் பயம், எதிர்பாராத நன்மை, காரிய தாமதம்;

**தனுசு**
உடல் சோர்வு, வீண் தொல்லை, பிரயாணபயம் நிலை கேடு.

**மகரம்**
திடீர் பயணம், பெரியோர் வெறுப்பு, அபூர்வ சந்திப்பு, முயற்சி நன்மை.

**கும்பம்**
சத்துரு ஜெயம், தொழில் விருத்தி, நல்ல சம்பவம், ஆரோக்கியம்;

**மீனம்**
கீர்த்தி, பெரியோர்மதிப்பு, மனச் சோர்வு, காரிய தாமதம்;

(பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது.)

வளவன்.


### வீடு விற்பனைக்கு

இல. 22A, வெள்ளாந் தெரு, யாழ்ப்பாணம் எனும் முகவரியில் அமைந்துள்ள மாடி வீடு விற்பனைக்கு உள்ளது.

தொடர்பு:

**துர்க்கா**
விற்பனை நிலையம்
201, மானிப்பாய் வீதி,
யாழ்ப்பாணம்.

(3546)


### நீர் விநியோகத் தடங்கல் பற்றிய அறிவித்தல்

யாழ். போதனா வைத்தியசாலைக்கு முன்பாக உள்ள 375 மி. மீ. வால்வ் திருத்த வேலை செய்ய வேண்டியிருப்பதால் 14 - 09 - 2001 (இன்று) பிரதான தாங்கியின் மேற்குப் பகுதிக்கு நீர் விநியோகம் தடைப்பட்டிருக்கும் என்பதை பொது மக்களுக்கு இத்தால் அறியத்தருகின்றேன்.

இ. இராமலிங்கம்
மாநகர ஆணையாளர்,
யாழ்ப்பாணம்.

மாநகர சபை,
யாழ்ப்பாணம்.
[C/2495]

## இன்று புத்தூக்க வகுப்பு

(மந்திகை)

தென்மராட்சி கல்வி வலய பாடசாலைகளில் க.பொ.த. சாதாரணதர பரீட்சையில் உடற்கல்வி பாடத்தில் தோற்றவுள்ள மாணவர்களுக்கான புத்தூக்கவகுப்பு இன்று பி.ப. 1 மணிக்கு நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது;

வகுப்பில் கலந்துகொள்ளும் மாணவர்களை மைதான உடைகளுடன் வருமாறு வலயக் கல்விப் பணிப்பாளர் வ. செல்வராசா தெரிவித்துள்ளார்;

(செ-23)

## ஒருவர் உயிரிழப்பு

(வவுனியா)

வெல்லாவெளிப் பகுதியில் கடந்த திங்கட்கிழமை இராணுவத் தினருடன் ஏற்பட்ட மோதலில் மேஜர் வினோத் (சிதம்பரப்பிள்ளை திவாகரன், மட்டக்களப்பு) என்ற போராளி உயிரிழந்ததாக புலிகளின் குரல் வானொலி அறிவித்துள்ளது.

(ந- 5)

## கட்சிக்குள்...

அமைச்சரவையில் பதவிவகிக்கமாட்டேன். எனினும்புதிய அரசியல்கட்சிஒன்றை அமைக்கவோ அல்லது வேறுகட்சிகளுடன் இணையவோ போவதில்லை. கட்சிக்குள் இருந்து கொண்டே போராட முடிவு செய்துள்ளேன் என்றும் அக்கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்;

(வ்)

## ஜே.வி.பியின்...

நாயக்கா, பட்டி வீரக்கோன் தினேஷ்குணவர்த்தன, இத்தியகுணவர்த்தன, றெஜிரணதுங்கா, டக்ளஸ்தேவானந்தா அலவி மௌலான, பௌஸி, ஆறுமுகம் தொண்டமான், திருமதி பேரியல் அஷ்ரப், அநுரா பிரியதர்ஷனயாப்பா, மகிந்தராஷபக்ஷ, அத்தாவுட செனிவிரத்தின, மங்களசமரவீரா, றொனிடிமெல், சிறிபாலடிசில்வா, ரிச்சாட்பத்திரன, சுசில் பிரேமஜயத், ஆகியோர் இடம் பெற்றுள்ளதாக ஜனாதிபதி வட்டாரங்கள் தெரிவித்துள்ளன;

(வ)

## நேற்று...

ளர்களுக்கு எதுவிதமான நன்மையும் கிடைக்கப்போவதில்லை:

ஜே.வி.பியுடன் கூட்டுச் சேர்ந்துள்ள இந்தஅரசில் நாம் ஒருபோதும் பதவிவகிக்க மாட்டோம் அரசாங்கம் மக்களுக்குக் கொடுத்தவாக்குறுதியை நிறைவேற்றாது இத்தகைய செயற்பாடுகளில் ஈடுபடுவதை நாம் விரும்பவில்லை என்றும் தெரிவித்துள்ள அவர்கள்;

சிறிலங்காசுதந்திரக் கட்சியிலும் பொதுஜன ஐக்கிய முன்னணியிலும் பாராளுமன்றக்குழுவிலும் தொடர்ந்தும் சேவையாற்றப் போவதாகவும் அக்கடிதத்தில் தெரிவித்துள்ளனர், (வ)


வடகிழக்கு மாகாண பொதுச்சேவையின் நில அளவையாளர் சேவை தரம் III/III தெரிவுப்பரீட்சை செப். 2001

வழிகாட்டலுக்கும் கடந்த கால வினாக்களுக்கும் 25.09.2001க்கு முன்பாக தொடர்பு கொள்ளவும்;

திரு.எஸ். கோகுலன்
(DIP IN SURVEYING)
'துவாரகை' இராஜ வீதி
தோப்பு, அச்சுவேலி.

(3547)

## யாழ்- பல்கலைக்கழக மருத்துவ பீடத்திற்கு

# மாணவர்களைஉள்வாங்குவதில் காட்டும்வேகம்

# அவர்களைவெளியேற்றுவதிலும்காட்டவேண்டும்

## பாதிக்கப்படும் மாணவர்களின் உள்ளக்குமுறல் இது

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீடத்திலும் சரி, யாழ். போதனா வைத்தியசாலையிலும் சரி போதிய விரிவுரையாளர்களோ வைத்திய நிபுணர்களோ இல்லாமையால் எமது கற்கைநெறியைப் பூர்த்தி செய்வதற்கான காலம் நீண்டுகொண்டே செல்கிறது.

இந்த நிலையில் மருத்துவ பீடத்திற்கு மாணவர்களை உள்வாங்குவதில் காட்டுகின்ற வேகம் மகிழ்ச்சி தருகின்ற வேளையில் கற்கின்ற மாணவர்களது படிப்பை பூரணப்படுத்தி வெளியேற்றுவதில் இல்லாமை கவலையளிக்கின்றது.

யாழ். பல்கலைக்கழக மருத்துவபீட புகுமுக மாணவர் வர்களுக்கான மருத்துவக் கல்விககு முன்னதான கற்கைநெறி கடந்த திங்களன்று மருத்துவபீட மாணவர் ஒன்றியத்தினால் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

மருத்துவபீட மாணவர் ஒன்றியத் தலைவர் ஆ. பிரதீப் தலைமையில் இடம்பெற்ற இந்தஆரம்ப நிகழ்வில் ஒன்றியச் செயலாளர் பி. ஜெயசாகரன் உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்.

புதிய அணியுடன் சேர்த்து தறபோது மருத்துவ பீடத்தில் 9 அணிகள் உள்ளன.

இலங்கையிலுள்ள எந்தவொரு பல்கலைக்சழகத்திலும் 5 அல்லது 6 அணிகளை விட மேலதிகமான அணிகள் ஒரே தடவையில் கற்றது கிடையாது.

அதேநேரம், பலரை உள்வாங்கக் கூடியதான நல்ல பெரிய அழகான கட்டடமும் வேண்டிய நூலக வசதியும் எம்மிடம் உண்டென்பதை நாம் மறுப்பதற்கில்லை.

அத்துடன், மற்றைய பல்கலைக்கழகங்களுடன் ஒப்பிடுகையில் மிகவும் நல்ல அமைதியான சூழ்நிலையில் எமது பீடம் அமைந்திருப்பது எமக்கு கிடைத்த வரப்பிரசாதம் என்றே கூறவேண்டும்.

இருப்பினும் எமது மருத்துவப் படிப்பைப் பூர்த்தி செய்வதில் எந்தளவிற்கு பின்னிற்கின்றோம் என்பது மிக சிலருக்குமட்டுமே தெரியும் இதனை புதுமுகமாணவர்களாகிய உங்களுக்கு தெளிவுபடுத்த வேண்டியது எமது கடமையாகும்.

கொழும்பு மருத்துவபீடத்திற்கு 92 ஆம் ஆண்டு உயர்தரம் எழுதி தெரிவானவர்கள், அவர்களது கற்கைநெறியினை பூர்த்திசெய்து வெளியேறி வைத்தியசாலையில் ஒருவருட உள்முகப்பயிற்சியினை பூர்த்தி செய்யும் நிலையில் உளளனர்.

அதேநேரம் அதேவருடம் எமது பீடத்திற்கு வந்தவர்கள் இன்னும் இறுதிஆண்டில் உள்ளனர்.

அத்துடன் கொழும்பு மருத்துவபீடத்தில் 93 ஆம் ஆண்டு அணியும், வெளியேறிவிட்டது. 94 ஆம் ஆண்டு அணி இந்தவருட இறுதிக்குள் வெளியேற இருக்கின்றது.

இந்த இடைவெளிக்கு காரணம் நமது நாட்டுநிலைமையாக இருந்தாலும், எமது பீடத்தில் இருந்து வெளியேறும் பெரும்பாலான மருத்துவர்களே இங்கு பணிபுரிய முன்வராததும் ஒரு காரணம் என்பதும் மறுப்பதற்கில்லை.

நாங்கள் 5 வருடத்தில் படித்து முடிக்கவேண்டிய மருத்துபடிப்பினை 7-8 வருடங்கள் பலத்த சவால்களுக்கும், கஷ்டங்களுக்கும் மததியில் இங்கிருந்து படித்தோம்.

தொடர்ந்தும் இங்கு இருந்து எவ்வாறு கஷ்டப்பட முடியும்' என்று இங்கு பணிபுரிய முன்வராதோர் வாதிடுகின்றனர் ஆகமொத்தத்தில் இங்குபயிலும் மாணவர்களாகிய நாம் பாதிக்கப்படுகின்றோம்.

எனவே, மருத்துவ மாணவர்கள் சார்பில் மருத்துவ மாணவர் ஒன்றியம் பல்கலைக்கழக நிர்வாகத்தினை கேட்டுக்கொள்வது யாதெனில், மிக விரைவாக புது மாணவர்களை உள்ளெடுப்பதில் காட்டும் அதே ஆர்வம் மாணவர்களை வெளியேற்றுவதிலும் காட்டவேண்டும் என்பதேயாகும்.

அதேநேரம் ஏற்கெனவே இருக்கும் குறைந்தது 3 அணிகளாவது வெளியேறாத பட்சத்தில் அடுத்தஆண்டு வரும் அணியினை உள்வாங்குவதை மருத்துவ மாணவர் ஒன்றியம் எதிர்க்கவேண்டி வருவது தவிர்க்க முடியதாகி விடும்.

காரணம் அவர்களுக்கான நிதிஉதவி 5 வருடங்களுக்கு மட்டுப்படுத்தப் ட்டுள்ளது. கற்கைநெறிக்கான காலம் அதிகரிக்கும் போது அவர்களின் செலவுகளை சமாளிக்க முடியாமல்பெரும் கஷ்டங்களை எதிர்நோக்குகின்றனர்.

எனவே நிர்வாகமும் எமது பீடத்தின் சபையும் மாணவர்களின் இந்த கஷ்டங்களை கருத்திற்கொண்டுஅவர்களது கற்கை நெறிக்கான காலம் அதிகரிப்பை குறைப்பதற்கு ஏற்ற வழி வகைகளைசெய்ய வேண்டும்.

அத்துடன் எமது பீடத்தின் இறுதி ஆண்டு மாணவர்களை வெளிஇடங்களுக்கு அவர்களது வைத்தியப் பயிற்சிக்கு அனுப்புவதற்கு பீடத்தின் சபை முடிவுஎடுத்ததைமாணவர்களாகியநாம் மிக்கமகிழ்ச்சியுடன் வரவேற்கின்றோம்.

இதேபோன்று தொடர்ந்தும் எமது கற்கை நெறிக்கான காலத்தை குறைப்பதற்கு நிர்வாக முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும் என்று தெரிவித்தார்.

இந்நிகழ்வில் மருத்துவ பீடாதிபதி செல்வி வசந்தி அரசரட்ணம் மற்றும் சமூக வைத்தியத்துறைத் தலைவர் என். சிவராஜா முன்னாள் பீடாதிபதி டாக்டர் ஆர். ராஜேந்திரப் பிரசாத் ஆகியோர் கலந்து கொண்டனர்.

(உ)

## நிரை தயாரிப்பு கூட்டம்

(மந்திகை)

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலை மாணவர்களிடையே நடை பெறவுள்ள வலய மட்டஉதைபந்தாட்டப் போட்டிகளில் கலந்து கொள்ளும் மாணவர்களுக்கான நிரை தயாரிப்புக் கூட்டம் இன்று 11.00 மணிக்கு நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்தில் நடை பெறவுள்ளது.

தெரிவு செய்யப்பட்ட பாடசாலைப் பொறுப்பாசிரியர்களை தவறாது கலந்து கொள்ளுமாறு வலயக் கல்விப் பணிப்பாளர் வ. செல்வராசா தெரிவித்துள்ளார்

(செ-23)

## கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டி

(சுண்டுக்குளி)

புனித மரியன்னை பேராலய இளைஞர்உருவாக்கஇயக்கம் அமரர் அருட்திரு ஜெபநேசன் அடிகள் ஞாபகார்த்தமாக பேராலய விளையாட்டு அரங்கில் நடத்திய கரப்பந்தாட்டச் சுற்றுப்போட்டித் தொடரின் முதலாவது சுற்று நேற்று முன்தினம் இடம்பெற்றது.

முதலாவது ஆட்டத்திலகுருநகர் பாடுமீன் அணி அதனை எதிர்த்தாடிய சென்ரூக் அணியை இரு நேர் செற்றுகளில் 15:8, 15:7 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வென்றது.

இரண்டாவது ஆட்டத்தில் குருநகர் பாரதி கழக அணி அதனை எதிர்த்து ஆடிய ஈச்சமோட்டை ஞானவைரவர் கழக அணியை இருநேர் செற்றுகளில் 15:4 15:12 என்ற புள்ளிகள் அடிப்படையில் தோற்கடித்தது.

இவ்விரு ஆட்டங்களுக்கும் நடுவர்களாகசே. ஏகாம்பரம் கப்டன் டி ஏ.எம் குணசிங்கம் ஆகியோர் கடமையாற்றினர்.

[110]

## தே. இ. சே. மன்றத்தின்

# கலாசாரப் போட்டிகள் 22 ஆம் திகதி ஆரம்பம்

(ஈச்சமோட்டை)

தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின யாழ். மாவட்ட அலுவலகத்தினால் நடத்தப்படும கலாசாரப் போட்டிகள எதிர்வரும் 22 ஆம் 23 ஆம் திகதிகளில் யாழ். ஸ்ரான்லிக் கல்லூரியில் நடைபெறவுள்ளன.

எதிர்வரும் 22 ஆம் திகதி நாடகம், அபிநயநடிப்பு, நாட்டுக் கூத்து போன்ற நிகழ்வுகளும், 23 ஆம் திகதி பரத

வரத்து கட்டணங்களோ தேசிய இளைஞர் சேவைகள் மன்றம் வழங்காது எனவும் யாழ். மாவட்ட இளைஞர் சேவைகள் அதிகாரி அ. சக்திவேல் தெரிவித்துளளார்.

(செ-59)

## கலைக்கூறு பயிற்சி

[யாழ்ப்பாணம்]

காங்கேசன்துறை மாவட்ட சாரணர் கிளைச் சங்கத்தினால், சாரணர். குருளைச் சாரணர்களுக்கான கலைக்கூறு இரண்டு பயிற்சிகள் இன்று முதல் 17ஆம் திகதி வரை மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலையில் நடைபெறவுள்ளன.

## பழுதடைந்த முச்சக்கர வண்டிகளை

## ஐ.தே. க.வை நாயுடன் ஒப்பிட்ட மக்கள்விடுதலைமுன்னணி

(கொழும்பு)

ஜே.வி.பியினர் தருவித்தது ஆடம்பர வாகனங்களோ, சொகுசு வாகனங்களோ இல்லைஎமது சேவைக்கேற்ற வாகனங்களேஎன்றுஜே.வி.பியினர் தெதரிவித்துள்ளனர்.

பாராளுமன்ற உறுப்பினருக்குதீர்வையற்ற வாகனங்கள் இறக்குமதி செய்யப்பட்டமை தொடர்பாக ஐ.தே. கட்சியினர் தவறான பிரசாரங்களை செய்துவருவதாக தெரிவித்த ஜே.வி.பியினர்இது தொடர்பாக அறிக்கை ஒன்றை வெளியிட்

னங்களுக்கு ஓடர் கொடுக்குஞ் சந்தர்ப்பத்தில் நாம் 07 டபிள்காப் வாகனங்களுக்கும் 02 ஹை எஸ் வான்களுக்கும் மாத்திரம் கோரிக்கை விடுத்துள்ளோம்.

எமது 25 மாகாண சபை அங்கத்தவர்களில் ஒருவரின் வாகன அனுமதிப்பத்திரத்தை மாத்திரம் பயன்படுத்தி வான் ஒன்றை விலைக்கு வாங்கியுள்ளோம். மற்றவர்களைப் போல் களவான வாகன அனுமதிப் பத்திரம் பாவிப்பவர் எம்மத்தியில் கிடையாது.

யில் நடைபெறவுள்ளன.

எதிர்வரும் 22 ஆம் திகதி நாடகம், அபிநயநடிப்பு, நாட்டுக் கூத்து போன்ற நிகழ்வுகளும், 23 ஆம் திகதி பரத நாட்டியம், பேச்சு, அறிவிப்பாளர், கிராமிய நடனம், புதிய நிர்மாணிப்பு நடனம், சாஸ்திரியப் பாடல், புதிய பாடல், கிராமியப் பாடல், மிருதங்கம், வயலின், ஓர்கன் ஆகியவற்றில் போட்டி நிகழ்வுகளும் நடைபெறவுள்ளன; இப்போட்டிகளுக்குவிண்ணப்பித்தவர்களுக்கு போட்டிக்கான அழைப்புக்கடிதம்அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் போட்டிகளுக்கான பின்னணி வாத்தியம், அலங்காரங்கள் அனைத்தும் போட்டியாளர்களே கொண்டுவர வேண்டுமெனவும் அதற்கான கட்டணங்களோ, போக்கு

# பழுதடைந்த முச்சக்கர வண்டிகளை பதிவுசெய்ய கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

முச்சக்கரவண்டி மற்றும் சக்கர நாற்காலி பாவனையாளர்கள்,இவை பழுதடைந்திருப்பின் அது பற்றிய விபரத்தை உடனடியாக சம்பந்தப்பட்ட பிரதேச செயலகத்தில் பதிவு செய்யுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

பழுதடைந்த முச்சக்கர வண்டி,சக்கர நாற்காலிகள் திருத்தவேலைக்கெனயு.என். எச்.சி.ஆர் அமைப்பு இவ்வாண்டு நிதி ஒதுக்கியிருப்பதால்,இவை தொடர்பான விபரங்களை உடன் சமர்ப்பிக்க வேண்டியதேவை இருப்பதாகவும்,

தாமதித்தால் நிதிதிரும்பிச் செல்லும் ஏதுநிலை உள்ளதாகவும் பிரதேச செயலக வட்டாரங்களால் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (உ-10)

ஐ.தே. கட்சியினர் தவறான பிரசாரங்களை செய்துவருவதாக தெரிவித்த ஜே.வி.பியினர்இது தொடர்பாக அறிக்கை ஒன்றை வெளியிட்டனர்;

அதில் குறிப்பிடப்பட்டிருப்பதாவது;

சில பாராளுமன்ற உறுப்பினர்கள் 40 தொடக்கம் 60 லட்சம் வரையான பெறுமதியான ஆடம்பர சொகுசு வாக

ளோம். மற்றவர்களைப் போல் களவான வாகனஅனுமதிப் பத்திரம் பாவிப்பவர் எம்மத்தியில் கிடையாது.

சந்திரனைப் பார்த்து நாய்கள் குரைப்பதால்சந்திரனின் மகிமை குறைவதும் இல்லை நாய் வானத்திலே வீற்றிருப்பதும் இல்லை என ஜே.வி.பியினரின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளன.

(உ-7)

# திருமலை மாவட்டத்தில் கடும் வரட்சி; மக்கள் சிரமம்

(கொழும்பு)

திருகோணமலை மாவட்டத்தில் கடும் வரட்சி காரணமாக மக்கள் குடிநீரைப் பெற்றுக் கொள்வதில் பெருஞ் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர்.

குடிநீர் பெற்றுக் கொள்ளும் நீர் நிலைகள் வற்றியுள்ளதுடன் குழாய் நீர்விநியோகமும் பல தினங்களாகத் தடைப்பட்டுள்ளதனால் மக்கள் நீர் நிலைகளைத் தேடியலைகின்றனர்.

மின்வெட்டுக் காரணமாகவும், ஜெனரேற்றர்களில் ஏற்பட்டுள்ள கோளாறு காரணமாகவுமே குழாய் நீர் விநியோகம் தடைப்பட்டுள்ளதாக தேசிய நீர் வழங்கல் வடிகால் அமைப்புச் சபையின் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார். (செ)

# இலங்கையர்களின் நிலை அறிய அமைச்சு தீவிரம்

(கொழும்பு)

அமெரிக்காவில் வசிக்கும் இலங்கையர்கள் விமானத் தற்கொலைக் குண்டுத் தாக்குதலுக்கு இலக்காகி உயிரிழந்துள்ளனரா அல்லது காணாமல் போயுள்ளனரா என்பதைக் கண்டறிவதில்இலங்கை வெளிவிவகார அமைச்சகம் ஈடுபட்டுள்ளது:

அமெரிக்காவில் வசிக்கும் இலங்கையர்கள் பற்றிய விபரத்தை உடனடியாக இலங்கைக்கு அனுப்பி வைக்குமாறு அமெரிக்காவிலுள்ள இலங்கைத் தூதரகத்துக்கு அவசர உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது:

இதேவேளை அமெரிக்காவில் இலங்கைத் தூதரகம் நியூயோர்க் நகரில் உலகவர்த்தக மையக் கட்டடத்துக்கு அண்மையில் அமைந்துள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது: (இ)

# கணவனின் இரண்டாம் மனைவி முதல்தாரத்தால் கொலை

(கொழும்பு)

கணவனின் இரண்டாம் மனைவியை முதல் மனைவி கொலை செய்த சம்பவம் நாலந்த உடுதெனியப் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

இச்சம்பவம் பற்றித் தெரிய வருவதாவது; தனது கணவன் ஏற்கனவே மணம் முடித்தவர் என அறிந்த இரண்டாம் மனைவி அவருடன் சண்டையிட்டு அவரைக் கத்தியால் குத்த முனைந்த பொழுதே அங்கு வந்த முதல் மனைவி அக் கத்தியைப்பறித்து தனது கணவனின் இரண்டாவது மனைவியைக் குத்திக் கொலை செய்துள்ளார். (செ)

# முல்லைத்தீவில் கடும் மழை இடம்பெயர்ந்தோர் அவலம்

(கொழும்பு)

வன்னிப்பெருநிலப் பரப்பின் முல்லைத்தீவு மாவட்டத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை கடும் மழை பெய்துள்ளது:

இதனால் இப்பகுதிகளில் நிரந்தர வதிவிடம் இல்லாத மக்கள் பெரும் அவல நிலைக்காளாகினர்.

இதேவேளை நாட்டின் தென் பகுதியிலும், திருமலை, மன்னார் மாவட்டங்களிலும் கொடிய வரட்சி தொடர்ந்தும் நீடித்து வருவது குறிப்பிடத்தக்கது. (செ)

# உயர்தரமாணவர்களுக்கான அறிவியல் வினாக்கள்

## இல: 74 தொகுப்பு: ரீ. மயூரன்

### நுண்ணறிவு

★ பின்வரும் பெட்டிக்குள் உள்ள சேர்வைகளின் தொடர்பை இனங்கண்டு தமிழ் எழுத்துக்கள் உள்ள இடத்தில் வர வேண்டிய சரியான சேர்வையை தருக?

| | | | |
|---|---|---|---|
| தி | $B_2X$ | $C_3Y$ | $D_4Z$ |
| $B_4Y$ | $A_2Z$ | $D_3W$ | ம |
| $M_2A$ | $N_4C$ | $O_6E$ | சு |
| EFI | HI3 | ப | NO7 |
| 2AB | ச | 8EF | 16GH |

1) தி=?
2) ம=?
3) சு =?
4) ப = ?
5) ச = ?

★ 6-10 வரையான வினாக்கள் ஒவ்வொன்றிலும் தரப்பட்ட சொற் தொடர்களில் இரு சொற்கள் ஏனையவற்றிலிருந்து வேறுபட்டன அவற்றின் கீழ் கோடிடுக.

6) இலிற்றர், இறத்தல், நேரம், மீற்றர், நிறை, கிலோ
7) மணம், சுவை, கசப்பு, பார்வை, காது, ஸ்பரிசம்
8) பால், பழம், தானியம், கிழங்கு, கோதுமை, முட்டை
9) துணிவு, வெற்றி, பயம், அச்சம், தோல்வி, அவமானம்
10) குளம், நதி, வயல், ஏரி, வாவி, மலை

★ 'அமெரிக்காவில் அடி' என்பதன் சிலேடைக் குறியீடு 'AMRCKBLAD' என்பதாக அமைகிறது. பின்வரும் சிலேடைக் குறியீடுகளை மொழி பெயர்க்க.

11) ACK AB= — — — — — —
12) ARCK BDL AD = — — — — —
13) KLKBL= — — — — — —
14) AMRCKBLC KR= — — — —
15) KRCK= — — — — —

★ பின்வரும் எண் தொடரில் அடுத்து வரவேண்டிய எண் யாது.

16) 1, 8, 2, 10, 3, — — — —
17) 2, 4, 7, 11, — — — — —
18) 3, 9, 6, 18, — — — — — —
19) 1, 2, 2, 4, 3, 6, — — — — — — —
20) 60, 5, 55, 10, 50, 15, — — — — —

### பொது அறிவு

★ உலகிலேயே பின்வருவனவற்றில் மிகப் பெரியவைஎவை?

21) தேவாலயம் — — — — —
22) நூலகம் — — — — —
23) நதி — — — — — —
24) மணிக்கூடு — — — — — —
25) தீவு — — — — — — — —

★ பின்வரும் வினாக்களுக்கு சுருக்கமான விடை தருக.

26) ஒரு மலையின் உயரத்தை எக்கருவியைக் கொண்டு அளக்கலாம்?
27) அணுசக்தி பெறப்பயன்படுத்தப்படும் கனிமங்கள் (மூலகங்கள்) எவை?
28) மனித முள்ளந்தண்டில் உள்ள என்புகளின் எண்ணிக்கை யாது?
29) உலகிலேயே மிகப் பெரிய நகரம் எது?
30) இலங்கைக்கு சர்வஜன வாக்குரிமையை பெற்றுக் கொடுத்த ஆணைக்குழுதலைவரின் பெயர் என்ன?

★ பின்வரும் நாடுகளின் பழைய பெயர்களைத் தருக.

31) தாய்லாந்து — — — — —
32) தைய்வான் — — — — —
33) ஈரான் — — — — —
34) ஈராக் — — — —
35) இந்தியா — — — — —

★ பின்வருவோர் எத்துறையில் பிரபல்யம் வாய்ந்தவர்கள்.

36) மைக் டைசன் — — — — — —
37) பிராங் சினட்ரிறா — — — — —
38) ஜோன் சிங்கர் சார்ஜன்ற் — | — — —
39) ரவீந்திர நாத் தாகூர் — — — — — —
40) பேர்ணாட் ஷோ — — — — — —

குறிப்பு:-

விடைகளை வேறுதாளில் எழுதி அனுப்பவும் இதற்கான விடைகளை 19.09.2001 இற்கு முன் எமக்குக் கிடைக்கத் தக்கதாக அனுப்பி வைக்கவும்

**அறிவியல் பகுதி**

**வினா இல : 74**

"வலம்புரி"

இல: 15, வெள்ளாந்தெரு,

யாழ்ப்பாணம்.

மாணவர் முழுப்பெயர்: ..............................

சொந்த முகவரி: ..............................

கற்கும் பாடசாலை : ..............................

மாணவர் கையொப்பம் : .................. தாளுடன்

இப்படிவத்தை வெட்டி உங்கள் விடைத் தவறாது இணைத்து அனுப்பி வைக்கவும்.

அச்சுறுத்தலாய்

## அமையும் பனைமரம்

(அரிலயைா)

யாழ்ப்பாணம் பொதுசன நூலகம் (கச்சேரியடி) மற்றும் தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்திற்கு செல்லும் வீதியில் முறியும் நிலையில் பாரிய பனையொன்று இன்னொரு மரத்தினுள் சிக்கிய நிலையில் காணப்படுகிறது.

இது எப்போதும் விழக் கூடிய அபாய நிலையில் உள்ளது அந்தப்பனை வீழுந்தால் மின், தந்தி கம்பிகள் அறுந்து பாரிய சேதத்தை ஏற்படுத்தும் என்று பொது மக்கள் அச்சம் தெரிவிக்கின்றனர். (உ-106)

## சுத்திகரிப்பு தொழிலாளர் நியமனம்

(உடுவில்)

வலிதென்மெற்கு பிரதேச சபைக்குட்பட்ட சுன்னாகம், உடுவில் உபஅலுவலகங்களில் நிலவிவந்த சுத்திகரிப்பு தொழிலாளர் பற்றாக்குறையை நீக்கும் வகையில் புதிதாக சுகாதாரத் தொழிலாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். (உ-129)

## அறிவியல் வினா இல-73

**அதி கூடிய புள்ளிகளைப் பெற்றவர்களின் பெயர் விபரம்**

★ ர. கேசவன், கொக்குவில் இந்துக் கல்லூரி
★ வீ. செந்தூஷன், மாசார் அ. த. க. பாடசாலை
★ வீ. செந்தீபன், மாசார் அ. த. க. பாடசாலை
★ த. தாட்சாயினி, நவாலி வீதி, ஆனைக்கோட்டை
★ சி. சயந்தன், வட்டு. யாழ்ப்பாணக் கல்லூரி
★ வி. பிரியா, தெல்லிப்பழை யூனியன் கல்லூரி
★ உ. காந்தரூபன், அளவெட்டி
★ தி. சுமங்கலா, கந்தர் மடம்
★ அ. தீபன், அளவெட்டி
★ சி. கார்த்திகா, நாவலர் வீதி, ஆனைப்பந்தி.

## அறிவியல் வினா இல-73 விடைகள்

1) பலன்
2) புத்தகம்
3) ஆச்சரியம்
4) 92
5) தூரம்
6) VX
7) RX
8) MLJ
9) E
10) VY
11) 31
12) —4
13) 18
14) 35
15) 2
16) அன்பு
17 வகை
18) வைக்க
19) புகை
20) மகன்
21) Universal Postal Union
22) International Telecommunication Union
23) International Development Association
24) UNIndustrial Development Organizotion
25) World FoodProgramme
26) ரீசன் டோலியகார்டன்
27) பில்கிளின்ரன்
28) விழிவெண்படலம்
29) ஜப்பான்
30) 2, 150 மைல்கள்
31) ஸ்டாக்ஹோம்
32) பாமீர்பீடபூமி
33) கியூபா
34) ஜிப்ரால்டர் ஜலசந்தி
35) ஹங்கேரி
36) ஒக்ரோபர் 24
37) ஒக்ரோடர் 5
38) டிசம்பர் 3
39) டிசம்பர் 1
40) டிசம்பர் 1

# அபிவிருத்தி தொடர்பான முக்கிய கூட்டம் நீர்வேலியில்

(யாழ்ப்பாணம்)

தற்போது மக்கள் எதிர்நோக்கும் அவலங்கள், அவற்றைத் தீர்ப்பதற்கு மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பான முக்கிய கூட்டம் ஒன்று நீர்வேலி காமாட்சி அம்பாள் தொழிற்சாலையில் கடந்த 11 ஆம் திகதிஇடம்பெற்றது.

வலி; கிழக்கு பிரதேச சபைத் தலைவர் பூ. குணசிங்கம், உப-தலைவர் யு- எல். ரவி, நீர்வேலி வடக்கு கிராம அலுவலர் அல்பிரட் உட்பட பல பிரமுகர்கள் இந் நிகழ்வில் கருத்துரை வழங்கினார்கள்.

இடம்பெயர்ந்து மீண்டும் தமதுசொந்த இடங்களில் குடியேறியோருக்கு வழங்கப்பட்டு வரும் நிவாரண விநியோகம், தடைப்படாமல் தொடர்ந்து வழங்குவதற்கான நடவடிக்கைகள் குறித்து மேற்படி கூட்டத்தில் ஆராயப்பட்டன.

தரமான அரிசி விநியோகிக்கப்படுகிறதா என்பது பற்றி ஆராயப்பட்டதுடன் அது குறித்து பிரச்சினை இருப்பின் உடனே அறிவித்தால் தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் உறுதி அளிக்கப்பட்டது.

மேலும் கசிப்பு ஒழிப்பு சம்பந்தமாக தக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் தற்போதுள்ள கோதுமை மா தட்டுப்பாடு விரைவில் சீராகும் என்றும் அது பற்றி தகுந்த நடவடிக்கை துரித கதியில் மேற்கொள்ளப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

வலி. கிழக்கு பிரதேச சபைக்கு உட்பட்ட பகுதிகளில் மின்சாரம் வழங்காத பகுதிக்கு, மின்சாரத்தை விநியோகிக்க நடவடிக்கை மேற்கொள்வது என்றும் மின் உபகரணங்களை திருவிப்பதற்கு ஏற்படும் தடங்கலே சீரான மின் விநியோகம் இன்மைக்கு காரணம் என்றும் கூறப்பட்டது.

அபிவிருத்தியில் பிரதேச ரீதியாக எவ்வித வேறுபாடும் காட்டப்படமாட்டாது எனவும், இவ்வாறு வேறுபாடு காட்டப்படுவதாக கூறப்படுவது முற்றிலும் தவறு என்றும் பிரமுகர்கள் பலரும் விளக்கினர்.

ஆயிரத்திற்கும் மேற்பட்ட மக்கள் இந் நிகழ்வில் கலந்து கொண்டமை குறிப்பிடத் தக்கது. (க)

# நீர் கொழும்பில்36 தமிழர் பொலிஸாரால் கைது

(கொழும்பு)

நீர்கொழும்புப் பகுதியில் நேற்று முன் தினம் இரு பெண்கள் உட்பட 36 பேர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நீர்கொழும்பு எமில்டன் ஓடையை திடீரென சுற்றி வளைத்த பொலிஸார், தங்குமிட அனுமதிப்பத்திரம் இல்லாமை மற்றும் சந்தேகத்திற்கிடமான அடையாள அட்டைகள் வைத்திருந்தமை ஆகிய காரணங்களுக்காகவே அவர்கள் கைதுசெய்யப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கைது செய்யப்பட்ட 36 பேரும் வடக்கு- கிழக்குப் பகுதியைச் சேர்ந்த தமிழர்கள் என்றும் அவர்களது விசாரணை தொடர்ந்து நடைபெற்று வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (செ-7)

# கடற் தொழிலாளர் ஒய்வூதியத் திட்ட ஊக்குவிப்பு நடவடிக்கை

(மந்திகை)

கடல் தொழிலாளர் ஒய்வூதிய மாதம் ஒன்றை அனுட்டிப்பதற்கேற்ற நடவடிக்கைகளை வடமராட்சி கடல் தொழிலாளர் சங்கம் மேற்கொண்டு வருகின்றது.

இக்காலப் பகுதியில் கடல் தொழிலாளர்கள் குடியிருக்கும் கிராமங்கள் தோறும் ஒய்வூதியத் திட்டத்தில்இணைவது தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் கூட்டங்கள் நடத்தப்பட்டும் துண்டுப் பிரசுரங்கள் விநியோகிக்கப்பட உள்ளதாகவும் ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.

இதே வேளை கடல் தொழிலாளர்களை ஒய்வூதியத் திட்டத்தில் இணைத்துக் கொள்ளும் நிகழ்வு இம்மாதம்28ஆம் திகதி மு. ப. 10.00 மணிக்கு வடமராட்சி கடற்றொழிலாளர் சங்கமண்டபத்தில் இடம் பெறவுள்ளது. (உ-23)

# கொழும்பு திருமறைக்கலாமன்ற தமிழ்விழா இன்று ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

கொழும்பு திருமறைக்கலா மன்ற தமிழ்விழா நிகழ்வு இன்று வெள்ளவத்தை இராம கிருஷ்ண மிஷன் மண்டபத்தில் மாலை 6.00 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது.

இன்றைய நிகழ்வில் நடனம், நவீன நாடகம், இசை நாடகம், சிறுவர் நாடகம், இலக்கிய நாடகம் நாட்டுக் கூத்து என்பன இடம்பெறவுள்ளன.

இரண்டாம்நாள் நிகழ்வுகள் பம்பலப்பிட்டிபுதியகதிரேசன் மண்டபத்திலும் மூன்றாம் நாள் நிகழ்வுகள் பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்திலும் இடம்பெறவுள்ளன.

மேற்படி தமிழ் விழாவில் கலந்து கொள்வதற்கென யாழ் திருமறைக்கலாமன்றக் கலைஞர்கள் ஒரு தொகுதியினர் சென்றிருப்பது தெரிந்ததே. (உ-59)

## சைவச் சிறுவர் இல்லச் சிறுமி கொழும்பு பயணம்

(யாழ்ப்பாணம்)

சிறுவர் பாதுகாப்பு ஒன்றியம் இம்மாதம் 16ஆம் திகதி முதல் 19ஆம் திகதி வரையான காலப்பகுதியில் கொழும்பில்நடத்தவுள்ளசிறுவர்களின் நாடாளுமன்றம் மற்றும்ஆயத்தப்பயிற்சிப் பட்டறை ஆகியவற்றில் கலந்து கொள்வதற்காக திருநெல்வேலி சைவச் சிறுவர் இல்லத்தில் இருந்து செல்வி சுவர்ணஜா சோமசுந்தரம் தெரிவு செய்யப்பட்டுள்ளார் (உ)

## இன்று ஒரு தகவல்

# புளியின் மகத்துவம் பாரீர்

அந்த ஆளைக்கண்டாலே போதும் எனக்கு வயிற்றிலே புளிகரைத்தது மாதிரி ஆகிவிடும்! என்று சொல்வது உண்டு. 'இதோ இவர் வந்து அந்தச் செய்தியை சொன்ன பின்னர்தான் என்வயிற்றிலே பாலை வார்த்தது மாதிரி ஆனது. இப்படிச் சொல்கிறதுண்டு. வாளியில் புளியைக் கரைக்கிறதென்றால் அதுசரி! வயிற்றில்புளிகரைக்கிறதென்றால் அது எப்படி? மிகவும் பயமுறுத்தி விட்டார் என்று சொல்வதற்குப் பதிலாக இப்படிச் சொல்லுவார்கள். அது சரி! புளி என்ன அவ்வளவு மோசமான ஒன்றா?

சிலர் நினைத்துக் கொண்டிருக்கிறார்கள். 'புளி ஏதோ ருசிக்காகத்தான் ஆகாரத்தில் சேர்க்கிறோம். மற்றப்படி வேறு எந்தப் பிரயோசனமும் இல்லை' என்று. அதுதப்பானது. அதற்காகத்தான் இந்தத் தகவல் 100 கிராம் புளியில் பல்ப் 283 கலோரி சத்து இருக்கிறதாக நிபுணர்கள் சொல்கிறார்கள். அப்படி இருக்கிறபோது அதைப் பற்றிப பேசாமலிருக்கமுடியுமா? புளிய மரத்திற்குப் பூர்வீகம் ஆப்பிரிக்காவாக இருந்தாலும். இப்போது நமது ஊர்களில் அதுதாராளமாக இருக்கிறதே!. சில மருந்து சாப்பிடும்போது புளி சேர்க்கக் கூடாதென்றுபத்தியம்சொல்வது உண்டு. ஆனால் புளியே ஒரு நல்ல மருந்து தான்.

தாகத்தைத் தணிக்க- பசியைத் தூண்ட- வீக்கத்தைக் குறைக்க இப்படி எல்லாவற்றிற்கும் இதை உபயோகப் படுத்தலாம். சுத்தமானதண்ணீரில் கொஞ்சம் புளியைக் கரைத்து அதில் ஆறு கரண்டி காலையில் சாபபிட்டால் பசியைஅதிகப்படுத்தும். உடம்பில் எங்கேயாவது வீக்கம்-வலி இருந்தால் புளிச்சாறு, உப்பு இவ்விரண்டையும் கலந்து தேய்த்து விடுங்கள். தினம இரண்டு தடவை இப்படிச் செய்தால் போதும். வெறும் புளியம்பழத்தைசாப்பிட்டாலே ஈறில் இரத்தம் நின்று போய்விடும். சாப்பிட்ட பின் ஒரு மணி நேரம் சழித்து நனறாகப் பழுத்த புளி ஒன்றைச் சாப்பிடுங்கள். அதுநல்ல பேதி மருந்தாகும். ஜீரணக் கோளாறா? பசியின்மையா? அதுக்கும் ஒரு புளி வைத்தியம்இருக்கிறது. என்ன தெரியுமா? நன்றாகக் கொதித்துஆறினபால் எடுத்து அதில் 4 அல்லது 5 சொட்டு புளிச்சாறு விடவேண்டும். பால் பிரிந்து அடியில் தங்கி விடும். மேலே தண்ணீராக ஒருதிரவம் நிற்கும் அதை எடுத்துத் தினமும மூன்று வேளை சாப்பிட வேண்டும். இதுவெறும்தண்ணீர்இல்லை: பாலில் இருக்கிற அத்தனை புரொட்டீனும் இந்தத் திரவத்தில் இருக்கும். அதே வேளை இது சுலபமாக ஜீரணித்து விடும். மிகவும் மென்மையான உணவு இது.

தென்னிந்தியாவில் உள்ளவர்களுக்கு மாரடைப்பு, சிறுநீரகக் கோளாறுகள் வருவது குறைவென்று விஞ்ஞானிகள் நம்புகிறார்கள். ஏன்? சாம்பார்-ரசத்திலெல்லாம் புளியைத் தொடர்ந்து உபயோகப் படுத்துகிறோம் அல்லவா? அதனால் தான்!. புளி விதைகளை தூளாக்கி வைத்துக் கொள்ளலாம். அதிலும் நிறைய மருத்துவ குணம் இருக்கிறது: இந்தத் தூளில் ஒரு மேசைக் கரண்டி எடுத்து தண்ணீரில் கலந்து தினம் மூன்றுவேளை சாப்பிட்டால் வயிற்றுப் போக்கு நிற்கும். அரை மேசைக்கரண்டிஇந்தத் தூளுடன் சம அளவு தேன் கலந்துதினம் இரண்டுவேளை சாப்பிட்டால் இரத்தப் போக்கை நிறுத்தி விடும்.

ஒரு மேசைக்கரண்டி தூள். தண்ணீர் ருசிக்காகக்கொஞ்சம் சர்க்கரை கலந்து தினம ஒருவேளை இரவுச் சாப்பாட்டுக்கு முன் இரண்டு வாரம் சாப்பிடலாம்: இது சக்திவிரயத்தைத் தடுத்து விடும். புளியங்கொழுந்தைக் கறிசெய்யலாம். அதில் விற்றமின் ஏ சி: இரும்புச் சத்து எல்லாம்இருக்கிறது புளியமரப்பட்டையை சுட்டுக் கரியாக்கி அதைத் தூளாக்கி எண்ணெயில் குழைத்து தீப்புண்ணுக்குத் தடவலாம். விஷம்குடித்தால் அடர்த்தியான புளிச்சாறு திரும்பத் திரும்பக் கொடுத்து வாந்தி எடுக்கச் செய்யலாம். பத்து மில்லி தண்ணீரில் 6 கிராம் பழுத்த புளியை இரண்டு மணி நேரம் ஊற வைத்து 4 மணித்தியாலத்துக்கு ஒரு தடவை கொடுத்தால்வாந்தியைநிறுத்திவிடும். ஆனால் ஒன்று இந்தக் கரைசலை ஒவ்வொரு தடவையும் புதிதாகத் தயார் செய்ய வேண்டும்:

புளிச்சாறு, கராம்பு இலவங்கப்பட்டை ஆகிய மூன்றையும் தண்ணீரில் கரைத்து உள்ளுக்குக் கொடுத்தால் உணவுப் பாதையில் உள்ள அழற்சிகளை சரியாக்கிவிடும். 25 கிராம் புளியை 120 மில்லி தண்ணீரில் ஒரு மணிநேரம் ஊறவைத்த பின்னர் 6கிராம் சீனி சேர்த்து, தலை லேசாக இருப்பது, அசதி போன்றவற்றிற்கு மருந்தாக உபயோகிக்கலாம். மற்றவற்றை மறந்தாலும் இதை மட்டுமாவது ஞாபகத்தில் வைத்துக் கொள்வது நல்லது. □

தென்கச்சிகோ. சுவாமிநாதன்

# முன்பள்ளி ஆசிரியர்க்கு மூலவள நிலையம்

## முத்திரைச் சந்தையில் அமைவு

(புலோலி)

யுனிசெவ் நிறுவனம் சுமார் 9 இலட்சம் ரூபா செலவில் முத்திரைச் சந்தையில் முன்பள்ளி ஆசிரியர் மூலவள நிலையத்தை நிர்மாணித்து வருகின்றது.

முன்பள்ளி ஆசிரியர்களுக்கு இம் மூலவள நிலையம் மிகப் பயன்பாடுடையதாரக அமையும் எனத் தெரிவிக்கப்படுகிறது. (உ-52)

# நலன்புரி நிலையத்தில் தங்கியுள்ள மக்களின் நலன்பேண நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

இடம்பெயர்ந்தோர் நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ள பொது மக்களின் உடனடித் தேவைகளை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கண்டறிந்து அதற்கேற்ற நடவடிக்கைகளை எடுப்பது தொடர்பாக ஆராய்ந்து வருகிறார்.

இந்தவகையில் வடமராட்சி வலிகாமம் பகுதிகளில் அமைந்துள்ள நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ள பொது மக்கள் மழை காலத்தில் எதிர்கொள்ளும் குடிநீர் மற்றும் சுகாதார இருப்பிடப் பிரச்சினைகளுக்கு தீர்வு காணும் வகையில் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மூலம் விபரங்கள் பெறப்பட்டு வருகின்றன. (உ)

## கோபுரத்தைக் கண்டவுடன் சிரமேல்

# கரம் குவிப்பது இந்துக்கள் கடமை

## மகாதேவக்குருக்கள் தெரிவிப்பு

(உடுவில்)

கோபுர தரிசனம் கோடி புண்ணியம்'' கோபுரத்தைக் கண்டவுடன் இறைபக்தி மேலோங்கிறது: உள்ளத்திலே தெய்வ நம்பிக்கை உண்டாகிறது. கோபுரங்கள் கட்டப்படுவது கோவிலின் வனப்பிற்காகவோ அன்றி, வடிவிற்காகவோ. அல்ல இங்குள்ள கோவில்களில் ஒரு இராஜகோபுரம் அல்லது இரண்டு இராஜ கோபுரம் மட்டுமே காணப்படுகின்றன. இந்தியாவிலே உள்ள ஸ்தலங்களிலே ஐந்து, ஆறு கோபுரங்கள் கட்டப்பட்டிருப்பதைக் கண்டு பெருமிதம் அடைந்தேன்.

இவ்வாறு சண்டிலிப்பாய் சீரணி நாகம்மாள் கோவில் பஞ்சதள இராஜ கோபுர குடமுழுக்கில் ஆசியுரை வழங்கிய இணுவில் காயத்திரி பீடாதிபதி பிரம்ம ஸ்ரீ, தா, மகாதேவக் குருக்கள் குறிப்பிட்டார்.

ஆலய பிரதம குரு பிரம்ம ஸ்ரீ. ச. சி. பாலசண்முகக் குருக்கள் தலைமையில் நடைபெற்ற இவ் விழாவில் காயத்திரி பீடாதிபதி தொடர்ந்து உரையாற்றுகையில்;

இங்கு பஞ்ச தளத்தையுடையதும், அதில் ஐந்து துவாரங்கள் உடையதுமான கோபுரம் அமைக்கப்பட்டுள்ளது. இந்துக் கோவில்கள் எமது உடம்பை அடிப்படையாக கொண்டே அமைக்கப்படுகின்றன.

கர்ப்பக்கிரகம் 5 தலை: அதேபோல அர்த்த மண்டபம் மகா மண்டபம், ஸ்நபந மண்டபம், ஸ்தம்ப மண்டபம் யாவும் ஆன்மாவை ஒத்ததாகவே உள்ளது. இங்குள்ள பஞ்ச தள கோபுரமும் மெய் வாய், கண், மூக்கு, செவி ஆகிய ஐம்பொறிகளோடு தொடர்புடையனவே.

கோபுரத்தைக் கண்டவுடன் தலை மேல் கரம் கூப்பி வழிபடுவதை இந்துக்கள் ஒவ்வொருவரும் கண்டிப்பாக செய்ய வேண்டும் என்றார்.

ஆலய தொண்டர் சபை சார்பில் திரு. சிவதெட்சணா மூர்த்தி அருளுரை வழங்குகையில்;-ஆகாயத்தில் இருக்கின்ற இறைவனை கர்ப்பக்கிரகத்திற்கு அழைக்கின்ற தொடர்புச் சாதனமே கோபுரம் ஆகும். அதாவது- தொலைக் காட்கிக்கு டிஸ்க் அன்ரனா போல கருவறையிலுள்ள கடவுளுக்கு கோபுரம் மூலம் தொடர்பு ஏற்படுகிறது. (உ-129)

# பிரயாணிகள் தங்குமிடம் திறந்து வைப்பு

(புலோலி)

பருத்தித்துறை பஸ்நிலையத்தில் பருத்தித்துறை நகர சபையால் சுமார் $4\frac{1}{2}$ இலட்சம் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்ட பஸ்நிலைய நேரப்பதிவாளர் அலுவலகமும், பிரயாணிகள தங்குமிடமும் திறப்பு விழா வெகு சிறப்பாக நடைபெற்றது. நேரப்பதிவாளர் அலுவலகத்தின் திறப்பை பருத்தித்துறை நகர சபைத் தலைவர் வின்சென்ற்கெனடி வடபிராந்திய போக்குவரத்துச் சபை பருத்தித்துறைச் சாலை செயலாற்று உதவியாளர்வி. திருமுருகதாஸனிடம்கையளித்தார். திருமுருகதாஸன்நேரப் பதிவாளர் அலுவலகத்தைத் திறந்து வைத்தார். பிரயாணிகள் தங்கு மடத்தை நகர சபைத் தலைவர் வின்சென்ற் கெனடி திறந்து வைத்தார். மீன் சந்தையில் சுமார் 3இலட்சம் ரூபா செலவில்நிர்மாணிக்கப்பட்ட கொல்களத்தை நகரசபைத் தலைவரே திறந்து வைத்தார். (செ- 52)

## உணவு முத்திரை பெற்றுக் கொள்க

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் பிரதேச செயலகத்தின் கீழுள்ள கிராம சேவையாளர் பிரிவுகளில் விநியோகிக்கப்பட்டு வரும் உணவு முத்திரையை இதுவரையும் பெற்றுக் கொள்ளாதவர்கள்,

நிவாரண விநியோகம் ஆரம்பிக்கப்படவுள்ளதால் உடனடியாக அதனைப் பெற்றுக் கொள்ளுமாறும், குறிப்பாக தென்மராட்சியிலிருந்து இடம்பெயர்ந்தவர்கள் உடனடியாக தங்கள் கிராம சேவையாளர்களிடம் சென்று முத்திரையைப் பெற்றுக் கொள்ளும்படியும் கோப்பாய் பிரதேச செயலர் அறிவித்துள்ளார்: (உ)

## வாராந்த நிகழ்வுகள்

(யாழ்ப்பாணம்)

தொண்டைமானாறுசந்நிதியான் ஆச்சிரமத்தினரின் வாராந்த நிகழ்வுகளில் இன்று வெள்ளிக்கிழமை மு. ப: 10. 30 மணிக்கு, ஹாட்லிக் கல்லூரி ஆசிரியர் தியாக சோமஸ்கந்தராஜக் குருக்களின் அறிமுகவுரையைத் தொடர்ந்து 'சைவத்தைப் பெருமைப்படுத்திய பெண்ணடியார்கள்' என்னும் தலைப்பில் புதிய உயர்கல்லூரி நிர்வாகி திருமதி அருள் நங்கை சண்முகநாதன் சொற்பொழிவாற்றவுள்ளார். (செ)

## புனரமைக்கப்பட்ட

# கும்பலைக்குளம் திறப்பு கமக்காரர் திருப்தி

(ஏழாலை)

பட்டினிக்கெதிரான நிறுவனத்தின் 4 இலட்சத்து 25 ஆயிரம் ரூபா நிதியுதவியுடன் புனரமைக்கப்பட்ட மல்லாகம் கும்பலைக் குளம் கடந்த புதனன்று வலிவடக்கு பிரதேச சபைத் தலைவர் திருமதி பாலாம்பிகை ஸ்ரீபாஸ்கரனால் திறந்து வைக்கப்பட்டது.

இந்நிகழ்வில்பட்டினிக்கெதிரான நிறுவனத்தின் அதிகாரி மேற்படி குள மாதிரி வடிவம் பொறிக்கப்பட்ட கேடயம் வழங்கி கௌரவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இக்குளம் ஆழமாக்கப்பட்டதுடன் இணைந்த வாய்க்கால்களும் ஆழமாக்கப்பட்டு சுற்றிவர மண்அணை கட்டப்பட்டு புனரமைக்கப்பட்டுள்ளதால் இனிவரும் காலத்தில் பெருமளவு மழை நீரைத் தேக்கி விவசாய நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்த முடியும் என அப்பகுதி கமக்காரர் திருப்திதெரிவித்துள்ளனர். (உ-12)

# சாராயம் விற்ற பூசகர் பொலிஸாரால் கைது

(கொழும்பு)

கோவில் மடப்பள்ளிக்குள் மறைத்து வைத்து சாராயம் விற்ற ஆலய பூசகர் ஒருவர் பொலிஸாரால கைது செய்யப்பட்ட சம்பவம் புசல்லாவைப் பகுதியில் இடம் பெற்றுள்ளது.

மேற்படி பூசகர் இச் செயலில் ஈடுபட்டமை குறித்து பொது மக்கள் தகவல் கொடுத்ததன் பேரிலேயே பொலிஸார் இவரைக் கைது செய்துள்ளனர்.

ஏற்கனவே இப் பகுதியில் சட்ட விரோதமான முறையில் மதுபானங்கள் விற்பனை செய்யப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (செ)

# ஸ்ரீவல்லிபுரஆழ்வார்ஆலய வருடாந்த மஹோற்சவம்

(புலோலி)

இலங்கையின் விஷ்ணு ஆலயங்களில் ஒன்றான சரித்திரப் பிரசித்தி பெற்ற அருள்மிகு ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் ஆலய வருடாந்த மஹோற்சவம் எதிர்வரும் 17ஆம் திகதி திங்கட் கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது.

23ஆம் திகதி வெளிவீதியுலா திருவிழாவும், 24ஆம் திகதி குருக்கட்டு விநாயகர் தரிசனமும், 25ஆம் திகதி வெண்ணெய்த் திருவிழாவும், 26ஆம் திகதி துகில்த்திருவிழாவும, 27ஆம திகதி பாம்புத் திருவிழாவும், 28ஆம் திகதி கம்பன் போர்த் திருவிழாவும, 29ஆம் திகதி வேட்டைத் திருவிழாவும், 30ஆம் திகதி சபபறத் திருவிழாவும், அடுத்த மாதம 01ஆம் திகதி தேர்த் திருவிழாவும், 02ஆம் திகதி சமுத்திர தீர்த்தத் திருவிழாவும், 03ஆம் திகதி கேணித் தீர்த்தத திருவிழாவும், கொடியிறக்கமும், 04ஆம் திகதி ஆஞ்சநேயர் மடையும் நடைபெறவுள்ளன. (செ-23-52)

## ஸ்ரீவல்லிபுர ஆழ்வார் ஆலயத்தில்

# தேசிய சேமிப்பு வங்கியின் விசேட கருமபீடம்

(புலோலி)

சரித்திரப் பிரசித்தி பெற்ற ஸ்ரீவல்லிபுர ஆழ்வார் ஆலய மஹோற்சவ காலங்களில் ஆலயத்தில் இயங்கவுள்ள பருத்தித்துறை தேசிய சேமிப்பு வங்கியின் விசேட கருமபீடம் பருத்தித்துறை மேலதிக மாவட்ட நீதிபதி அன்னலிங்கம் பிறேம்சங்கரினால் திறந்து வைக்கப்படும்.

தேசிய சேமிப்பு வங்கியின் வாடிக்கையாளர்களாக இணைந்து கொள்பவர்களும், ரிதிரேகா சான்றிதழ்கள் கொள்வனவு செய்பவர்களும், ஏனைய புதிய கணக்குகளை ஆரம்பிப்பவர்களும் இந்த விசேட கருமபீடததில் நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம் என்றும் பருத்தித்துறை தேசிய சேமிப்பு வங்கி முகாமையாளர் எஸ். பரமானந்தம் தெரிவித்தார். (செ-52)

# அமெரிக்காவின் வரலாற்றில் மாறாத வடுவை ஏற்படுத்திய தற்கொலை விமானத் தாக்குதல்

உலகத் தலைவன் என்ற அந்தஸ்தில் உயர்ந்து விளங்கும் அமெரிக்கா மீது, விமானங்கள் மூலம் தற்கொலைக் குண்டுத்தாக்குதல்கள் நிகழ்த்தப்பட்டிருப்பது அகில உலகையே அதிர்ச்சியிலும் வியப்பிலும் ஆழ்த்தியுள்ளது.

அமெரிக்கா மீதே குண்டுத் தாக்குதல் என்பதை சிறு பிள்ளைத்தனமென விளையாட்டுக்கேனும் நம்ப மறுக்கும் இதயங்கள், உறைந்து அதிர்ச்சியில் மீளாதுள்ளன.

## முக்கிய நகரங்கள்

ஐக்கிய அமெரிக்காவின் தலைநகர் வாஷிங்டன், மற்றும் அந்நாட்டின் பொருளாதார மையம் நியூயோர்க் ஆகிய கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த நகரங்கள் இரண்டும் இனந்தெரியாதோரின் மாபெரும் துணிகரத்தாக்குதலுக்கு இலக்காகி துவம்சமாகியுள்ளன:

அமெரிக்காவின் பொருளாதார மையமும், உலகின் பாரிய பொருளாதாரநிலையமுமான நியூயோர்க் நகரின், மிக நெடிய நீண்டு வானளாவி நிற்கும் 110 அடுக்கு மாடிகளைக் கொண்ட இரண்டு கட்டடத் தொகுதிகள் மீதும், அமெரிக்கப் படைத் தரப்பின் இதயம் என்ற சிறப்பு மிக்கதும், அந்நாட்டின்பாதுகாப்புப்பிரிவின் பொக்கிஷமுமான ''பென்ரகன்'' எனும் அமெரிக்க பாதுகாப்பு மையத்தின் மீதும் நடத்தப்பட்ட துணிகரமான தாக்குதல் அமெரிக்காவையே கிடுகிடுக்க வைத்ததுடன் சர்வதேசத்தையே ஒருகணம் உலுப்பி எடுத்து விட்டது:

## விமானக் கடத்தல்

அத்துடன் அந்நாட்டுக்கே சொந்தமான ''போயிங் 767'' ரக இராட்சத பயணிகள் விமானங்கள் நான்கை வெவ்வேறு இடங்களில் இருந்து நன்கு திட்டமிட்ட அடிப்படையில் ஒரு கணப் பொழுதில் கடத்தி அந்நகரங்கள் மீது குறுகிய நேர இடைவெளியில் பெரும்தாக்குதலை நடத்தி பேரழிவை ஏற்படுத்தி விட்டன:

அமெரிக்க பொருளாதார மையமாக நியூயோர்க்கில் ''உலக வர்த்தக மையம்'' (WORLD TRADE CENTRE) மன்ஹட்டன் சிற்றியில் வானளாவ உயர்ந்து 110அடுக்கு மாடிகளுடன் உலகின் பொருளாதாரத்தை விலைபேசிக் கொண்டவாறு மிடுக்குடன் காட்சியளிக்கிறது.

அக்கட்டடத் தொகுதிகள் மீது கடந்த 11ந் திகதி அமெரிக்க நேரப்படி காலை 8.32 மணிக்கு வான்பரப்பில் திடீரென முளைத்த இராட்சத விமானமொன்று மிகவேகமாகச் சென்று அடுக்கு மாடிக் கட்டடம் ஒன்றின் மீதுமோதி வெடித்துச் சிதறியது.

110மாடிக் கட்டடத்தின் 60ஆவது மாடிப் பகுதியில் விமானம் மோதி வெடித்துச் சிதறியதால் கட்டடப் பகுதியெங்கும் பெரும் தீ பரவி தீச்சுவாலை கொழுந்து விட்டு எரியத் தொடங்கியது.

## தகர்ந்த கட்டடங்கள்

கட்டடத்தின் மையப்பகுதியில் தாக்குதல் நிகழ்த்தப்பட்டதால் அந்த உயர் மாடிக் கட்டடம் சில நிமிடங்களில் தரைமட்டமாகி பூமியை அணைத்துக் கொண்டது

முதற் கட்டடம் மீதுதாக்குதல் நிகழ்த்தப்பட்டசிலநிமிட நேரங்களில், வான்பரப்பில் இருந்து மிகவேகமாக விரைந்து வந்த மற்றொரு இராட்சத விமானம்,மற்றைய அடுக்கு மாடிக் கட்டடத்தின் உச்சிப் பகுதியில்மோதி வெடித்துச் சிதறியது;

கட்டடம் எங்கனும் தீபரவி தீ நாக்குகள் கொழுந்துவிட்டு எரியத்தொடங்கியது. வெடித்துச் சிதறிய குண்டுத் தாக்குதலினால்கட்டடத்தின் அத்திவாரம் குலுங்கி ஒருசில மணி நேரத்தில் 110 மாடிக் கட்டடத் தொகுதி தரையோடுஐக்கியமாகியது:

நியூயோர்க் நகரில்உலகவர்த்தக மையக்கட்டடத்தொகுதிகள் மீது தாக்குதல் நடத்தப்பட்ட அதே நேரம் அமெரிக்கத் தலைநகர் வாஷிங்டனில் அமைந்துள்ளபாதுகாப்பு தலைமையகமானபெண்டகன் மீது மற்றொரு இராட்சத பயணிகள் விமானம் வேகமாகச் சென்று கட்டடத்துடன் மோதி.வெடித்துச் சிதறியது.

இதனால் அக்கட்டடத்தின் ஒரு பகுதி தகர்ந்ததுடன், கரும்புகைகளை கக்கியவாறு பாரிய தீச்சுவாலையுடன் கட்டடத் தொகுதி எரியத் தொடங்கியது: பெண்டகன் கட்டடம் மெல்ல மெல்ல இடிந்து வீழ்ந்து கொண்டிருக்கிறது.

## இலக்குத்தவறியது

மூன்று விமானங்களின் தற்கொலைத் தாக்குதல்கள் வெற்றிகரமாக முடிந்த நிலையில், நான்காவது பயணிகள் விமானமான 'ஜம்போ 747' ரக விமானம் அமெரிக்காவின் மற்றொரு,மாநிலமானபென்சில் வேனியாவில் முக்கிய இலக்கொன்றைத் தகர்க்கச் சென்ற போதும் அங்கு அவ் விமானம் தாக்குதல் இலக்கை தவறவிட்ட நிலையில்வீழ்ந்து நொருங்கியுள்ளது;

## நிரந்தரவடு

உலகையே உலுக்கிஅமெரிக்காவையே கிடுகிடுக்க வைத்த இத்துணிகரதற்கொலைவிமானத் தாக்குதல் ஏற்படுத்திய அழிவின்வடுக்கள், அமெரிக்க வரலாற்றில் ஓர் நிரந்தர வடுவாகவும் அதன் வளர்ச்சிப்படியில் ஒரு கறுப்புப்புள்ளியாகவும் மாறிவிட்டது:

சுமார் இருபத்தையாயிரத்துக்கும் அதிகமான மக்களைப் பலி கொண்ட இத்தாக்குதல் பெரும் எண்ணிக்கையில் பல்லாயிரக்கணக்கானோரைக் காயங்களுக்கும்,அங்கவீனங்களுக்கும் உள்ளாக்கி கொடூர பாதிப்பை ஏற்படுத்தி விட்டது;

நகரங்கள் இரண்டிலும் ஏற்பட்ட அழிவுகளின் பெறுமதி கணிப்பிடப்படாத நிலையில் பொருளாதாரப் பேரழிவொன்றையும் அமெரிக்காவுக்கு ஏற்படுத்தி விட்டது;

தாக்குதல்கள் நடத்தப்பட்ட பகுதிகளான நியூயோர்க், வாஷிங்டன் நகரமெங்கும் ஒரே புகை மண்டலமும் கட்டட இடிபாடுகளும் பரவியுள்ளதுடன் கட்டடங்களினுள் அகப்பட்டு இறந்தவர்கள் குண்டுத்தாக்குதலால் மரணமடைந்தவர்களின் சடலங்களும் ஆங்காங்கே சிதறியுள்ளன;பிண நாற்றமெடுக்கும் அந்த நகரங்கள் சோலை இழந்து மயான பூமியாககாட்சியளிக்கின்றன.

தாக்குதல் நிகழ்த்தப்பட்ட நேரம் காலை என்பதாலும் அன்றைய தினம் அலுவலக நாளாக அமைவதாலும் அந் நகரங்களில் பெருந்திரளான மக்கள் கூடியிருந்தனர்.

## இறந்தவர் எண்ணிக்கை

மாணவர்கள், உத்தியோகஸ்தர்கள், வர்த்தகர்கள், பயணிகள் என மக்கள் வெள்ளத்தில் நகரம் நிரம்பியிருந்த வேளையில் தாக்குதல் நிகழ்ந்திருப்பதால், இறந்தவர்களின் எண்ணிக்கை அதிகமாகவே உள்ளது;

**ஈ. ஏ. ஜெயன்**

இதனை விட வர்த்தகமையத்தில் மட்டும் 50ஆயிரத்துக்கும் அதிகமான ஊழியர்கள் பணியாற்றுகின்றனர்.

ஒட்டு மொத்தத்தில் இவர்கள் அனைவரதும் கதியை எண்ணும் போது பெரும் பிணக்குவியலைக் கண்டு கொண்டது போன்ற அச்சத்தை உணரமுடிகிறது.

## வெள்ளை மாளிகை

பாதுகாப்பு மையமான பென்டகனில் இருந்து சற்றுத் தொலைவில் அமைந்துள்ள அமெரிக்க ஜனாதிபதியின் வெள்ளை மாளிகை, உயர் நீதி மன்றம், திறைசேரி, மற்றும் அரச கட்டடங்களில் இருந்த அரசியல் தலைவர்கள், அரச உயரதிகாரிகள், முக்கிய பிரமுகர்கள் அனைவரும் தாக்குதல் சம்பவத்தையடுத்து பாதுகாப்பான இடங்களுக்கு மாற்றப்பட்டனர்.

இதனால் ஜனாதிபதியின் வெள்ளை மாளிகை மற்றும் அரச முக்கிய மையங்கள் அனைத்தும் வெறிச்சோடின.

அமெரிக்க வான் பிரதேசத்தில் விமானங்களின்பறப்புக்கு தடை விதிக்கப்பட்டதுடன், பறந்து கொண்டிருந்த விமானங்கள் எல்லாம் அண்டைய நாட்டு விமான நிலையங்களில் தரையிறக்கப்பட்டன.

அமெரிக்காவை நோக்கி வந்து கொண்டிருந்த விமானங்கள் எல்லாம் கனடாவில் தரையிறக்கப்பட்டது.

மற்றொரு தாக்குதல் நிகழாமல் தடுக்கும் நோக்கில் அவசரம் அவசரமாகக் கூடிய பாதுகாப்புக் கவுன்சில் ஜெட் வேக பாதுகாப்பு நடவடிக்கைகளை எடுக்குமாறு படைகளுக்கு உத்தரவிட்டது.

அமெரிக்காவின் ஏனைய முக்கிய நிலையங்கள் அனைத்தும் உச்ச பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு படைகள் முழு உஷார்ப் படுத்தப்பட்டன.

## புரியாத புதிர்

நன்கு திட்டமிடப்பட்ட அடிப்படையில் வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட்ட இத்தாக்குதல் யாரால்? எதற்காக? எவ்வாறு செய்யப்பட்டதென்பது இன்னும் புரியாத புதிராகவே உள்ளது.

அமெரிக்க விமானங்கள் அனைத்தும் ஒரே நேரத்தில் எவ்வாறு கடத்தப்பட்டன? ஒரே நேரத்தில் இலக்குத் தவறாமல் எவ்வாறு தாக்குதல் திட்டமிடப்பட்டது? அமெரிக்காவின் உளவுப் பிரிவின் கண்களில் எவ்வாறு மண் தூவப்பட்டது? என்பனவிடைகாண முடியாத கேள்விகளாகவே உள்ளன.

அமெரிக்கா சர்வதேச சண்டியன் அவனுக்கு ஒரு பயங்கர வில்லன் எங்கிருந்து முளைத்தான்? அவன் யார்? அவனின் கூட்டம் எங்கே எப்படிச் செயற்படுகின்றதென்பதை விபரமாக அறிவதற்கு சீ. ஐ. ஏ. தீவிரமாக ஈடுபட்டுள்ளது.

அரபு மொழி பேசுகின்ற கூட்டத்தவர்களுடன் தான் அமெரிக்காவுக்கு பகைமை என்பதும், ஜப்பானுக்கு அமெரிக்கா மீது வன்மம் உண்டென்பதும் தெரிந்தவிடயமே;

இந் நிலையில் பாரிய இத்தாக்குதலுக்கு இவர்கள்தான் காரணமா? அல்லது அவர்களது சாட்டில் வேறு யாராவது குளிர் காய்கின்றனரா என்பது வெளிச்சத்துக்கு வராத இருண்ட சங்கதியாக உள்ளது.

## பின்லேடன்

பொதுவாக செய்தி ஊடகங்கள் மற்றும் சில நாடுகளின்அபிப்பிராயம் சர்வதேச பயங்கரவாதியென அழைக்கப்படும் பின்லேடனின் திட்டமிட்ட தாக்குதல் இதுவென்று தெரிவித்த போதும், அஞ்ஞாத வாசம் மேற்கொள்ளும் பின்லேடன் பாகிஸ்தான் பத்திரிகைகள் ஊடாக தனக்கும் அத்தாக்குதலுக்கும் தொடர்பு இல்லையென்று மறுப்புத் தெரிவித்துள்ளார்;

மற்றும் பாலஸ்தீன விடுதலை அமைப்பு இத்தாக்குதலை நடத்தியதா என செய்திகள் வெளியானபோது அவ்வமைப்பின் தலைவர் ஜஸீர் அரபாத் 'அமெரிக்கத் தாக்குதல் எதிர்பாராத பெரும் அதிர்ச்சியைத் தந்திருப்பதாக' அதிர்ச்சியும் கண்டனமும் வெளியிட்டுள்ளார்.

## ஜப்பான்

இந்நிலையில் வேறு யார் தாக்குதலை நிகழ்த்தியிருக்கலாம் எனஆராய்ந்து கீழைத்தேசத்தில் ஜப்பான் பக்கம் பார்வையை திருப்புகின்றபோது, 1945 ஆம் ஆண்டு ஜப்பானின் கிரோஷிமா மற்றும் நாகசாகி நகரங்கள் மீது அமெரிக்கா அணுக்குண்டுகளை வீசி பாரியஉயிர்ச்சேதத்தை ஏற்படுத்தி தீராத வடுவை ஜப்பானுக்கு ஏற்படுத்தியிருந்தது:

இதற்குப்பழிதீர்க்கும் படலமாக ஜப்பானே அமெரிக்காவின் இரு நகரங்கள் மீதும் தாக்குதலை நடத்தியதென ஊகங்கள்வெளியாகியுள்ளன;

இதனை உறுதிப்படுத்தும் வகையில் ஜப்பானிய தீவிரவாத அமைப்பான 'சிவப்பு இராணுவம்' அமெரிக்கத் தாக்குதலுக்கு உரிமை கோரியுள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

## பயணிகள் பலி

நான்கு விமானங்களும் தற்கொலையாளிகளால் அமெரிக்க நகரங்கள் மீது மோதி வெடிக்க வைத்துத் தாக்குதலை நடத்தியுள்ளதால் பயணிகள் விமானமான அவற்றில் இருந்து 266 பயணிகள் சிதறுண்டு பலியாகியுள்ளனர்.

இவ் விமானம் ஒன்றில் கடமையில் இருந்த இரு பணிப்பெண்கள், விமானம் தீவிரவாதிகளால் கடத்திக் கொண்டு செல்லப்படும் போது, விமானத்தில் இருந்து மறைவாக, தங்களது தாய்மாரிடம் செலூலர் தொலைபேசி மூலம் உரையாடியுள்ளனர்.

இவர்கள் உரையாடல் மூலம் தங்களை தீவிரவாதிகள் கத்திகளைக் காட்டிமிரட்டுவதாகவும், பிரயாணிகள் பலர் கட்டுமீறி செயற்பட்டதால் கத்தியால் குத்தியதாகவும் பீதியுடன் தெரிவித்துள்ளனர்:

அமெரிக்க மக்கள் தொடர்பு அதிகாரி மாக்ஸின்பா விமானத்தில் பணிப் பெண்ணாகக்கடமை புரியும் தனதுஉறவினருடன் தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டபோது, தீவிரவாதிகள் கத்திகளைக் காட்டி மிரட்டுவதாக அவர்கள் தெரிவித்ததுடன் பெரும் கூச்சல் தொலைபேசியில் கேட்டதாகவும் சிறிது நேரத்தில் தொலைபேசி இணைப்பு துண்டிக்கப்பட்டதாகவும் தெரிவித்துள்ளார்.

உண்மை நிலை தெரிய இனி வரும் நாட்களில் எதிர்பார்ப்போம்.

(மீண்டு ம்வரும்)

# தாக்குதல் காரர்களின் பயணப் பொதிகள் மீட்பு

(வாஷிங்டன்)

அமெரிக்காவின் 'பென்டகன்' மீது தாக்குதல் நடத்திய விமானத்தில் எடுத்துச் செல்லப்படவிருந்த பயணப் பொதிகள் இரண்டை அமெரிக்க புலனாய்வுப் பொலிஸார் கண்டுபிடித்துள்ளனர்:

அதிவேக ஜெற் விமானம் செலுத்துவதற்கான விபரங்களைக் கொண்ட வீடியோ ஒலிப்பேழை ஒன்றும்அதனுள் இருந்ததாக அப்பொலிஸார் தெரிவித்தனர்.

மேற்படி பயணப் பொதிகள் இரண்டையும் அரேபியர் ஒருவரேகொண்டுசெல்ல இருந்ததாகவும் குறித்த நபர் தாக்குதல் நடத்தப்பட்ட விமானத்தில் பயணம் செய்ய அனுமதிச்சீட்டை பெற்றுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

(உ-7)

# நேர்நின்று அமெரிக்காவை போருக்கு அழைக்க முடியாத கோழைகளின் செயல்

## தற்கொலைத் தாக்குதல்குறித்துபுஷ் இப்படித் தெரிவிப்பு

(வாஷிங்டன்)

அமெரிக்காவின்மீது தீவிரவாதிகள் நடத்தியது வெறும் தாக்குதல் அல்ல, அமெரிக்காவைப் போருக்கு அழைக்கும் ஒரு உபாயம் என்று தாக்குதல் தொடர்பாக தொலைக்காட்சி ஒன்றுக்கு வழங்கிய பேட்டியில் அமெரிக்க அதிபர் தெரிவித்துள்ளார்;

அவர்மேலும் தெரிவிக்கையில்; இதுஒரு தற்கொலைத் தாக்குதல்என்றோ, அல்லது அமெரிக்காவின் பிரதான நகரங்களை பொருளாதார கீழ்நிலைக்கு தள்ள மேற்கொண்ட தாக்குதலென்றோ சொல்லமுடியாது

தற்கொலைத் தாக்குதல் என்பது இலங்கையில் விடுதலைப்புலிகள் நடத்துவதும் மத்தியகிழக்கில் பலஸ்தீனியர் நடத்துவதுமே தற்கொலைத் தாக்குதல்என்று சொல்ல முடியும்.

தாக்குதல் நடத்தப்போகும் இடத்தில் பொதுமக்கள் காணப்பட்டால் அவர்களை விலக்கி தமது இலக்கினை அடைவதே தற்கொலைக் குண்டுத்தாக்குதல் என்ற வகையில் அடங்கும்;

அமெரிக்காவை நேருக்கு நேர்நின்று போரிட அழைக்க முடியாத இன்னுமொரு வல்லரசு மறைமுகமாக இவ்வாறு தாக்குதல் நடத்தியுள்ளது;

அப்பாவி மக்களை கவசமாகப்பயன்படுத்திய இத்தாக்குதலை தற்கொலைக்குண்டுத் தாக்குதல்என்று சொல்ல முடியாது; இதுஒரு கோழைத்தனம் என்றே சொல்லலாம். என அவர்தனது பேட்டியில் மேலும் கூறியுள்ளார்;

(உ-7)

அல்லற்பட்டு ஆற்றாது அழுது கண்ணீரன்றே செல்வத்தைத் தேய்க்கும் படை

குறள்

வலம்புரி

## 3ம் உலக போரின் கருக்கட்டல்

உலகம்முழுவதும் ஏதோஒருவகையில் அழிவு தரும் ஆயுதங்களைத் தயாரித்துக் கொண்டே இருக்கின்றன. சுருங்கக் கூறின் மனித உயிர்களை காவு கொள்ளும் ஆயுத கலாசாரம் எங்கும் வியாபித்து விட்டது. மனித நேயம்-மனிதஉரிமை எல்லாம் ஆயுதத்தின் முன், மண்டியிட்டு, மரணதண்டனை பெற்றுள்ளன.

வாளெடுத்தவனுக்கு மரணம் வாளால் என்ற யேசு பிரானின் போதனையை, யேசுவின்கொள்கையைப் பின்பற்றும் நாடுகள் கூட மறந்து விட்டமைதுரதிஷ்டமானதே.

முதலாம், இரண்டாம் உலகப் போரை முன்னெடுத்து அப்பாவி மனித உயிர்களைப் பலி கொண்டதன் பாவ பழிகளை, அரை ; நூற்றாண்டுக்குப் பின்னர் அனுபவிக்க வேண்டியதன் நியதியாக, உலக வல்லரசுகளுக்கு ஈடாக தீவிரவாத அமைப்புக்களும் அதிவேக வளர்ச்சியடைந்துள்ளமை அதிசயமான உண்மை.

குறிப்பிட்டகால இடைவெளிக்கு முன் பிரிட்டிஷின் பிரதமராகஇருந்த மார்க்கிறட்தட்சர் அவர்கள் ஆயுதம் பற்றி கருத்துக்கூறுகையில், உலகநாடுகள் ஆயுதபலத்தை அதிகரித்திருப்பதனாலேயே யுத்தம் இடம் பெறாமல் இருப்பதாகக் கூறியிருந்தார்.

தட்சரின் இக் கூற்று, பிரிட்டிஷ், அமெரிக்கா போன்ற நாடுகளின் சுய நலத்திற்காகக்கூறப்பட்டதென்பதை அன்று சில நாடுகள் உணர்ந்திருந்தாலும், பலநாடுகள் அம்மாவின் கருத்திற்கு ஆமாப் போட்டன.

ஆனால் உலக நாடுகள் மட்டுமன்றி தீவிரவாத அமைப்புக்களும், ஆயுத பலத்தை அதிகரிக்கப் போவதை தட்சரோ, அவரின் கருத்துக்கு ஆமாப் போட்டவர்களோ அன்று உணர்ந்திலர்.


ஆயுதபலத்தின் அதிகரிப்பு ஆட் குறைப்பிற்கே வழிவகுக்கும் என்ற உண்மை இப்போது உணரப்பட்டுள்ள போதிலும் ஓர் எல்லை கடந்த நிலையில் ஆயுத மேலாண்மையைத் தடுப்பதில் வல்லரசுகளும் வலுவற்றுப் போகுமென்பது நிச்சயம்.

எதுஎப்படியாயினும் அமெரிக்கா மீதான தாக்குதல் 3வது உலகப் போருக்கான கருக்கட்டல் என்றே கூறவேண்டும்.

வெள்ளி நற்சிந்தனை

# திக்கெட்டிலும் திருமுறை முற்றோதலினால் சிறப்புறு சொர்ண சித்திவிநாயகராலயம்

கே. எஸ். சிவஞானராஜா
ஆசிரியர் (சங்கீதம்)
யா/ஸ்கந்தவரோதயக் கல்லூரி



தெய்வீக இன்பம்தர வல்ல திருமுறைகளினால், யாம் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம். ஆம். 01.09.2001 சனிக்கிழமை, உடுவில் ஸ்ரீ சொர்ணசித்தி பஞ்சமுக விநாயகர் ஆலயத்தில் திருமுறை முற்றோதல் நிகழ்வு, முன்னெப்பொழுதும் நடந்திராத வகையில், புதுமையாகவும், அற்புதமாகவும், பயபக்தியோடும் அரங்கேறியது. அகில இலங்கைத் திருமுறைமன்ற ஆதரவோடும், பண்ணிசை ஓதவல்ல இசைவல்லோர்களின் அனுசரணையோடும், எல்லாவற்றிற்கும் மேலாக மேற்படி தேவஸ்தானத்துக்குரியவர்களது பரிபூரண ஒத்துழைப்புடனும் நிறைவேறியது. ஏறத்தாழ நூறு ஓதுவார்கள் பங்குகொண்டு சிறப்பித்தமை நாட்டுக்கு நன்மை பயப்பதொன்றாகும். பல இடங்களிலிருந்தும் அடியார்கள் வந்து கலந்துகொண்டமை, நாட்டிலே நல்லவை நடக்கும் என்ற எண்ணத்தை தோற்றுவித்தது. உள்ளங்கவர் கள்வனாக இருக்கும் இறைவன், மக்களனைவரும் மண்ணில் நல்ல வண்ணம் வாழ விருப்பம் கொண்டவனாய், இவ்வாறான கைங்கரியங்களைச் செய்வதற்கு உத்தரவிடுகின்ற பாங்கினை உடுவில் ஸ்ரீ சொர்ண சித்தி பஞ்சமுக விநாயகராலயத்தில் காணக் கூடியதாக உள்ளது. தனிப்பட்ட நிர்வாகமுடைய இவ்வாலயம், ஆகம விதிகளுக்கப்பால் நின்று, சொர்ணாம்பாளின் தெய்வீக வாக்கிற்கேற்ப அடியவர்களை ஆட்கொள்ளுகின்ற மாட்சியும், அருளபாலிக்கின்ற திருக்காட்சியும் கொண்டதாகப் பொலிந்து காணப்படுவது - திருமுறை முற்றோதல்நிகழ்விற்கு அருள் கூட்டுவதாக அமைந்தது எனலாம்.

### எட்டுத்திக்குகளிலும் எட்டுக் குழுவினர்

விசேடமாகவும், நிரந்தரமாகவும் அமையப்பெற்ற தோரணப் பந்தல்கள் சூழ்ந்திருக்க, மூலமூர்த்தியாம பஞ்சமுகவிநாயகர் பட்டுப் பீதாம்பரங்களுடன் வீற்றிருக்க, தானாகவே கதவும் திறக்கப்பெற்ற அம்பாள் மங்களகரமாகக் கவிந்திருக்க, திருமுறை நூல்கள் குவிந்திருக்க, ஓதுவார் மூர்த்திகள் கரங்கூப்பிவணங்கிட, தேவஸ்தானக் குருக்கள் பூஜை ஆற்றிட காலை 6.00 மணிக்கு, ஏற்கனவே தீர்மானிக்கப்பட்ட எட்டுக் குழுவினரும், அட்டதிக்குகளிலுமிருந்து திருமுறைகளைப் பாராயணம் செய்ய ஆரம்பித்தனர். வானோங்கிய ஓசையினால் உடல் புல்லரித்தது.

இலங்கையில் முதன் முறையாக, அட்டதிக்குகளிலிருந்து திருமுறைகளைத் தொடர்ச்சியாக ஓதப்பட்ட சம்பவம், நிறைவுசெய்யப்பட்ட வைபவம் உடுவில் ஸ்ரீ சொர்ண சித்தி பஞ்சமுக விநாயகர் ஆலயத்திலே நடைபெற்றிருக்கிறது. இஃது ஒரு பெரும் பாக்கியம்என்றே கருதலாம். திருமுறைகளை ஓதும் போது 'யாருமே கதைக்கக்கூடாது' என்ற வாசகம் பொறிக்கப்பட்டிருந்ததனாலோ என்னவோ யாருமே கதைக்காத பயபக்தியினை அவதானிக்கக் கூடியதாக இருந்தது. ஒவ்வொரு திக்கிலும் நான்கு ஓதுவார்களுக்குக் குறையாத எண்ணிக்கையினர் பாராயணம் செய்தவண்ணமிருந்தனர். ஒவ்வொரு திக்கில் ஓதும் அடியார்களுக்கும், ஏற்கனவே திட்டமிடப்பட்டதிருமுறைப் பதிக இலக்கங்களும், அதற்குரிய புத்தகங்களும் வழங்கப்பட்டு இருந்தன. இதற்குரிய ஏற்பாடுகளனைத்தையும், அகில இலங்கை திருமுறைமன்றத்தினர்செய்திருந்தமை பாராட்டக் கூடியதொன்றாகும்.

### இடைவேளையின்றி ஓதினர்

சராசரியாகக் கணக்கிட்டுப் பார்க்கும் போது, ஒருநிமிடத்திற்கு, ஒருகுழுவினர்இரண்டு பாட்டுக்கள் வீதம் எட்டுக் குழுவினரும் ஏறக்குறைய 1( 18பாடல்களைஒருநிமிடத்தில் ஓதியிருக்கின்றார்கள். எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் இடைவேளையென்றோ, ஓய்வு என்றோ நிறுத்தப்படவில்லை. பதிலாக ஓதுவார்கள் மாத்திரம் பொருத்தமான வேளையறிந்துமாறிக் கொள்ள வசதிசெய்யப்பட்டது.

ஒவ்வொரு திருமுறைகளிலும் காணப்படுகின்ற சொற்பதங்கள், அவற்றிற்கான பொருளாழம், இசையமைப்பு, ஓசைநயம், தெய்வீக வீச்சு யாவும் முழுமையாக ஓதும் போதே உணரவும், உயர்த்தவும் முடிந்தது. ஓதுபவர்களைவிட, அதனைக் கேட்டவர்களே பெரும் பேறுபெற்றவர்களாகப் போற்றப்படுவர். மந்திரங்கள் மூலமாகவும் மூர்த்திகள் கீர்த்திபெறுவதுண்டு. திருமுறைகள் மூலமாகவும் மூர்த்திகள் அற்புதம் பெறுவதும்உண்டு, தொடர்ச்சியாகத் திருமுறைகள் முற்றோதிய தன்மையினால், அடைக்கப்பெற்ற அம்பாளின் திருக்கதவு தானாகத்திறந்த அற்புதமும் இந்த ஆலயத்திலேதான் நிகழ்ந்தது என்பது கூர்ந்து நோக்கத்தக்கதாகும். ஒரு உண்மையை மட்டும் இங்கு எழுதியேயாக வேண்டும். இந்த ஆலயத்தில் இன்னும் பல அற்புத நிகழ்வுகள் எதிர்காலத்தில் நடைபெறலாம். நடக்கும். ஒரு பூனை கதைக்கிறது என்று சொன்னால், ஆயிரமாயிரம் அன்பர்கள் வரிசையில் நிற்கிறார்கள். அம்பாளின் திருக்கதவுதானாகத் திறந்துகொண்ட சம்பவம், யாவரும் பார்த்திருக்க நடைபெற்றதொன்று. இலண்டன், கனடா, அவுஸ்ரேலியா நாடுகளிலுள்ளவர்கள் பக்தியோடு வரவேற்று வணங்குகின்ற சம்பவத்தினை எமதுநாட்டிலுள்ளவர்கள் வந்தொருக்கால் தரிசித்திட முடியாதவர்களாக இருக்கின்றார்கள். இத்தகுநிலைக்குக் காலமே பதில் சொல்லவேண்டும். இதனால்நாம்விருப்போ, வெறுப்போ அடையப்போவதில்லை. கேட்டால் நேரமோ இல்லையென்பார்கள் அல்லாவிடின் அது உண்மையா என்பார்கள். எல்லாம் அவன் செயலன்றோ!

### அஸ்வமேதயாகம்

இன்னும் அற்புதங்கள் பலப்பல உண்டு. அஸ்வமேதயாகம் நடைபெறுவதற்கான உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. நடைபெற்று முடிந்த திருமுறை முற்றோதல், அஸ்வமேதயாகத்திற்கு ஒரு பூர்வாங்க ஏற்பாடாக அமைவதாகவும்ஏற்றுக்கொள்ளலாம். மிகுந்த பயபக்தியோடு சமச்சீரான தூயவழியில் பாராயணம் செய்யப்பட்ட இந்நிகழ்வு அன்றைய தினம் இரவு 12. 00 மணிக்குப் பூர்த்தியடைந்தது. அதன் பின்னர் பூஜைகள் நடத்தப்பெற்று, திருமுறைகளை, கொடிகள், ஆலவட்டம், தூபதீபங்கள், மணியோசை சகிதம் ஊர்வலமாகக் கருதும் வண்ணம்வீதிவலம் கொண்டு வரப்பட்டு வணங்குதல் செய்யப்பட்டது; ஓதுவார்கள் அனைவருக்கும்காளாஞ்சி வழங்கிக் கௌரவம் அளிக்கப்பட்டது.

உடுவிலுக்கு மட்டுமல்ல, நாட்டுக்கே நன்மை யுடையது என்ற எண்ணம், யாவருடைய உள்ளங்களிலும் பிரகாசித்தது

''மண்ணில் நல்ல வண்ணம் வாழலாம்''

## 17-23,ஆம்திகதிவரை வறுமை ஒழிப்பு வாரம்

(கொழும்பு)

ஐக்கிய நாடுகள் சபையால் முதல் முறையாகப்பிரகடனப் படுத்தப்பட்டுள்ள சர்வதேச வறுமை ஒழிப்பு வாரம் எதிர் வரும் 17ஆம் திகதி தொடக்கம் 23ஆம் திகதி வரையும் அனுஷ்டிக்கப்படவுள்ளது.

இதனையொட்டி மட்டக்களப்பு மாவட்ட சமுர்த்தி அலுவலகப் பாடசாலை மாணவர்களிடையே 'பசுப்பால் குடிக்கும் பழக்கத்தை மக்களிடையே பிரபல்யம் செய்தல்' என்னும் தொனிப் பொருளில் சித்திரப்போட்டிகள் நடத்தப்பட்டு வருகின்றன. (செ)

## மீன்சந்தையால் மக்களுக்கு சிரமமில்லை

(அரியாலை)

யாழ்ப்பாணம் றக்கா வீதியில் இது வரை காலமும் வீதி ஓரத்தில் நடைபெற்ற மீன் சந்தை தற்போது தனியார் வளவொன்றில் இயங்கத் தொடங்கியுள்ளது;

இதனால் வீதிப் போக்குவரத்தில் ஏற்பட்ட நெருக்கடிக்கு முடிவு காணப்பட்டுள்ளது. (உ-106)

## காட்டுயானைகள் நாட்டிற்குள் படையெடுப்பு

(கொழும்பு)

நாட்டில் தற்போது நிலவும் கடும் வரட்சி காரணமாக காட்டு யானைகள் நாட்டிற்குள் படையெடுக்கும் நிலை குருநாகல் மாவட்டத்தில் தோன்றியுள்ளது.

தற்போது இலங்கை முழுவதும் கடும் வரட்சி நிலவுகின்ற போதும், குருநாகல் மாவட்டத்தின் சில பகுதிகள் கடும் வரட்சியால் பாதிக்கப்பட்டுள்ளன.

இதனால் இப் பகுதிகளுக்கருகில் உள்ள காடுகளில் இருந்து யானைகள் நீருக்காக குடியிருப்புக்களை நாடி வருகின்றன.

இவ்வாறு கூட்டம் கூட்டமாக வரும் யானைகள் பொதுமக்களைத் தாக்கி வருவதாகவும் இதனால் உயிரிழப்புக்கள் ஏற்படுவதாவும் தெரிவிக்கப்படுகின்றது. (செ

## சிறுவர் பூங்கா

(உடுவில)

வலிதென்மேற்கு பிரதேச சபைக்குட்பட்ட மானிப்பாய் யாழ்ப்பாணம் வீதியில் ஆனைக்கோட்டைப் பகுதியில் அமைந்துள்ள சிறுவர் பூங்கா கடந்த பல வருடங்களாகக் கவனிப்பாரற்றுக் காணப்படுகின்றது.

(உ-129)

## தினசரி தியானம்

### ஆறுதல் எங்கே?

பொய்க் கூடு கொண்டு
புலம்புவனோ எம் மிறைவர்
மெய்க் கூடு சென்று
விளம்பிவா பைங்கிளியே.

- தாயுமானவர் -

எல்லாம் அழிந்து பட்டுப்போம் இவ் அவனியிலே அண்ணலே, நான் எதைச் சார்ந்திருந்து ஆறுதல் அடைவது?

இந்த நிலவுலகிலே எல்லாம் நாசமடைந்து வருகின்றன. நமது அன்புக்குரியவர் அழிந்து பட்டுப் போயினர்; நண்பர் என்பார் நம்மைக் கை நழுவ விட்டுவிட்டனர். செல்வம் எல்லாம் சென்று கொண்டிருக்கிறது; ஆனால் உண்மை ஒன்று மட்டும் உறுதியாக நிற்கிறது, அவ்வுண்மையும் இறைவனும் ஒன்றே.

-ஸ்ரீமத்சுவாமி சித்பவானந்தர்-

# யாழ். பிராந்திய மக்கள் வங்கி விளையாட்டுக்கழகம்
## மக்கள் வங்கி வெற்றிக் கிண்ணத்திற்கான
## மாபெரும் துடுப்பாட்ட இறுதிப் போட்டிகள்-2001

மக்கள் வங்கியின் 40வது வருட நிறைவு விழாவினை ஒட்டி எம்மால் நடாத்தப்பட்ட மட்டுப்படுத்தப்பட்ட ஓவர்களைக் கொண்ட வெவ்வேறு சுற்றுப் போட்டிகளின் இறுதிப் போட்டிகள் பற்றிய விபரம்

**காலம்:** நாளை (15-09-2001)சனிக்கிழமை **இடம் :** யாழ். இந்துக்கல்லூரி மைதானம்

**1) விளையாட்டுக்கழகங்களுக்கிடையேயான 6பேர் 6ஓவர்கள் கொண்ட துடுப்பாட்ட இறுதிப்போட்டி**

கொக்குவில் K.C.C.C. விளையாட்டுக்கழகம் எதிர் 11 Stars விளையாட்டுக்கழகம்

நேரம்: காலை 9.00 மணி (இ. நே)

பிரதம விருந்தினர்: திரு. C. N. வித்தியாதரன், உதவிப் பொது முகாமையாளர் உதயன் பத்திரிகை நிறுவனம்

**2) வங்கி அணிகளுக்கிடையேயான துடுப்பாட்ட இறுதிப்போட்டி**

யாழ். பிராந்திய மக்கள் வங்கி விளையாட்டுக்கழகம் எதிர் ஹற்றன் தேசிய வங்கி ஊழியர் விளையாட்டுக்கழகம்.

நேரம்: காலை 9.30 மணி (இ.நே)

பிரதம விருந்தினர்: திரு. C. N. வித்தியாதரன், உதவி பொது முகாமையாளர் உதயன் பத்திரிகை நிறுவனம்

**3) அரச திணைக்களங்கள், வங்கிகள், கூட்டுறவுச் சங்கங்கள், கூட்டுஸ்தாபனங்களுக்கு இடையேயான துடுப்பாட்ட இறுதிப்போட்டி**

வர்த்தக வங்கி ஊழியர் விளையாட்டுக் கழகம் எதிர் புனித பத்திரிசியார் கல்லூரி ஊழியர் விளையாட்டுக்கழகம்.

நேரம்: மாலை 1.30 மணி (இ. நே)

பிரதமவிருந்தினர்: திரு. து. வைத்திலிங்கம் (யாழ் மாவட்ட மேலதிக அரச அதிபர்)

சிறப்பு விருந்தினர்கள்: திரு. S. சிவானந்தன் (உதவி ஆணையாளர், மதுவரி திணைக்களம்)
திரு. C. கனகசூரியர் (பிரதம முகாமையாளர், ஸ்ரீ லங்கா ரெலிகொம் நிறுவனம்)
திரு. A. தற்பரானந்தன் (உதவிக் கல்விப்பணிப்பாளர், உடுவில்)
திரு. A. ஸ்ரீகுமரன் (அதிபர், யாழ் இந்துக்கல்லூரி)
திரு K. V. குலரட்ணம் (தலைவர், யாழ் வர்த்தக சங்கம்)

துடுப்பாட்ட இறுதிப்போட்டிகளைத் தொடர்ந்து மாலை 5.00 மணிக்கு எமது மக்கள் வங்கியில் 40-வது வருடநிறைவை ஒட்டி நடாத்தப்பட்ட சகல போட்டிகளுக்குமான பரிசளிப்புவிழா வைபவம் இடம்பெறும்

**பரிசு பெறுவோர் விபரம்**

| | சைக்கிளோட்டம் (ஆண்கள்) | சைக்கிளோட்டம் (பெண்கள்) | மரதன் (பாடசாலைமாணவர்கள்) |
|---|---|---|---|
| 1வது இடம் | திரு கனகரட்ணம் லோகேஸ்வரன் காளிகோவிலடி, தாவடி தெறகு, கொக்குவில். | செல்வி சிவாஜினி பேரின்பம் நொச்சியம்பதி வீதி, அராலி மேற்கு வட்டுக்கோட்டை. | செல்வன் தங்கராஜா துஷன் நீர்வேலி வடக்கு. நீர்வேலி; |
| 2வது இடம் | திரு கனகரட்ணம் கமலேஸ்வரன் காளிகோவிலடி, தாவடி தெற்கு, கொக்குவில். | செல்வி கௌசியா செல்வராஜா மயிலணி வடக்கு, சுன்னாகம்; | செல்வன் சற்குணம் சந்திரகுமார் கந்தரோடை, சுன்னாகம். |
| 3வது இடம் | திரு மகேந்திரன் நிர்மலேஸ்வரன் நவாலி வடக்கு, மானிப்பாய். | செல்வி பருவநிலா இராசன் கோட்டைக்காடு, மல்லாகம்; | செல்வன் சிவலிங்கம் சிவலோசன் சாந்தை, பண்டத்தரிப்பு. |
| ஆறுதல் பரிசுகள் | 1. திரு மகாலிங்கம் மகேந்திரன் சாந்தை, பண்டத்தரிப்பு.<br>2. திரு தெய்வேந்திரன் சிவகுமார் சாந்தை, பண்டத்தரிப்பு.<br>3. திரு தெய்வேந்திரன் சண்முகராசா சுதுமலை தெறகு, மானிப்பாய்.<br>4 திரு நடராஜா ஜெபசுதன் அராலி மேற்கு, வடடுக்கோட்டை. | 1. செல்வி விபூசணி நடராசா அராலி மேற்கு, வட்டுக்கோட்டை.<br>2. செல்வி நளினா கதிர்காமத்தம்பி வண்ணாமரை, தெல்லிப்பழை கிழக்கு, தெல்லிப்பழை.<br>3. செல்வி வினிதா அண்ணாமலை சித்தியம்புளியடி, தெல்லிப்பழை கிழக்கு.<br>4. செல்வி தேவவதனி விநாயகமூர்த்தி குட்டியபுலம், வயாவிளான். | 1. செல்வன் கதிரவேலு சத்தியசீலன் புளியங்கண்டு ஒழுங்கை ஆனைக் கோட்டை.<br>2. செல்வன் முருகையா கோமகன் 39 கற்குளம்லேன், கொட்டடி, யாழ்ப்பாணம்;<br>3. செல்வன் சுப்பிரமணியம் பிரசாத் கீரிமலை வீதி, பண்டத்தரிப்பு;<br>4. செல்வன் ஜெயவிக்கிரமன் ஜெயதாஸ் 80ஈச்சமோட்டை வீதி, சுண்டுக்குளி யாழ்ப்பாணம்.<br>5. செல்வன் திரவியம் நகுலேஸ்வரன் சாந்தை, பண்டத்தரிப்பு. |

**அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.**

**யாழ் பிராந்திய மக்கள் வங்கி விளையாட்டுக்கழகம்,** (கி-2490)



மங்காத அசல் 22 கரட் தங்க நகைகளுக்கு

# நியூ ராதிகாஸ் நகை மாளிகை

*189, கஸ்தூரியார் வீதி,* [கி/2212] **யாழ்ப்பாணம்.**


இப் பத்திரிகை "வலம்புரி" அன் கோ ஸ்தாபனத்தாரால் இல 15, வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் எனும் விலாசத்தில் அமைந்துள்ள அவர்களது அச்சகத்தில் 2001-ம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 14-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.